Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

34ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நிதி: 34 பாலம்: 14 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JULY 15, 2024

# பிரித்தானியாவில் தொழிற்கட்சி ஆட்சி அமைக்கிறது

பிரித்தானியாவின் நாடாளுமன்றத்திற்கான தேர்தல் ஜூலை 04, 2024ஆம் திகதி நடைபெற்றது. நாடாளுமன்றத்தின் கீழ் சபைக்கு 650 நாடாளுமன்ற உறுப்பினர் களை பிரித்தானியாவில் வாழும்குடிமக்கள் தெரிவு செய்வர். நாடாளுமன்றத்தின் மேற் சபை பிரபுக்கள் சபை என அழைக்கப்படும். அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறும். அத்துடன் அவர்கள் நியமிக்கப் படுபவர்கள். மக்களால் தெரிவு செய்யப் படுவதில்லை. தற்போது 774 பேர் மேற் சபை உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

இதற்கு முன்னர் 2019ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த Boris Johnson 365 ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத் திருந்தார். பின்னர் அவர் அரசியல் ஊழலில் அகப்பட்டு 2022ஆம் ஆண்டில் பதவி விலகியபோது அவரது கட்சியைச் சேர்ந்த Liz Truss பழமைவாதக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு பிரித்தானியாவின் பிரதமரானார். அவரால் நாட்டின் பொருளாதாரத்தைச் சரிப்படுத்த முடியாமல் சிறிது நாட்களிலேயே பிரதமர் பதவியில் இருந்து விலகி பிரித்தானிய வரலாற்றில் மிகவும் குறைந்த காலம் பிரதமராக இருந்தவர் ஆனார். அதன் பின்னர், Rishi Sunak பழமைவாதக் கட்சியின் தலைவராகத் தெரிவானார். அவர் 2022 ஒக்ரோபரில் பிரித்தானியாவின் பிரதமரானார்.

2025 ஜனவரிக்கு முன்னர் தேர்தல் நடத்த வேண்டியிருக்கையில் பிரித்தானிய அரசின் பிரதமர் Rishi Sunak மே 30, 2024ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜூலை 4ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என அறிவித்தார். 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து பழமைவாதக் கட்சியே பிரித்தானியாவை கடந்த 14 வருடங்களாக ஆட்சி செய்து வந்தது.



Sir Keir Rodney Starmer - Prime Minister

நாட்டின் பொருளாதார நிலை மற்றும் பணவீக்கம் போன்ற காரணத்தால் நாடாளுமன்றம் மே 30ஆம் திகதி கலைக் கப்படும்போதே கருத்துக் கணிப்புகள் பழமைவாதக்கட்சிக்கு 23% மக்களின் ஆதரவு உள்ளதாகவும் எதிர்க்கட்சியான தொழிற்கட்சிக்கு 43% மக்களின் ஆதரவு உள்ளதாகவும் தெரிவித்தன. பிரித்தானிய நாடாளுமன்றம் மே 30இல் கலைக்கப் படும்போது நாடாளுமன்றத்தில் பழமை வாதக்கட்சி 344 உறுப்பினர்களையும், தொழிற்கட்சி 205 உறுப்பினர்களையும் ஸ்கொட்டிஸ் தேசியக்கட்சி 43 உறுப்பினர் களையும் மற்றும் லிபரல் ஜனநாயகக்கட்சி 8 உறுப்பினர்களையும் கொண்டிருந்தன.

தேர்தல் பிரச்சாரக்காலம் முழுவதும் ஊடகங்கள் தொழிற்கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்து வந்தன. ஜூலை 5ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியானபோது கட்சிகள் பெற்றிருந்த ஆசனங்களின் எண்ணிக்கையும் அவர்கள் பெற்ற வாக்கு சதவீதமும் பின்வருமாறு:

| கட்சியின் பெயர் | பெற்ற ஆசனங்கள் | சதவீதம் |
|---|---|---|
| தொழிற்கட்சி | 412 | 33.7% |
| பழமைவாதக்கட்சி | 121 | 23.7% |
| லிபரல் ஜன நாயகக் கட்சி | 72 | 12.2% |
| ஸ்கொட்டிஸ் தேசிய கட்சி | 9 | |
| Sinn Fein கட்சி | 7 | |
| ஏனையவை | 29 | |
| மொத்தம் | **650** | |

அறுதிப் பெரும்பான்மையைப் பெற 326 ஆசனங்கள் தேவையான நிலையில் தொழிற்கட்சி 412 ஆசனங்களைப் பெற்று பிரித்தானியாவில் பெரும்பான்மை அரசை அமைக்கிறது. பிரித்தானியாவில் நாடாளு மன்றம் பதவியில் இருக்கக்கூடிய காலம் ஐந்து வருடங்களாகும்.

பிரித்தானியா என்பது இங்கிலாந்து, ஸ்கொட்லண்ட், வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்து ஆகியவற்றை உள்ளடக்கிய ஐக்கிய இராச்சியம் ஆகும். இதன் சனத் தொகை 67.6 மில்லியன் ஆகும். இங்கு 18 வயதிற்கு மேற்பட்டோருக்கு வாக்களிக் கும் உரிமை உண்டு. 392 பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இங்கு இருக்கின்றன.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானோரில் 59.9% ஆனோரே வாக்களித்திருந்தனர். கடந்த

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

CANADIAN COLLEGE
VISITOR VISA TO A STUDY VISA WITH OUR ASSISTANCE and work while studying!
IELTS may not be required.
35 years of experience in education and IT.
study@thecanadiancollege.ca
416-850-1456 +1 437-223-4505

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436

CANADIAN COLLEGE
Canadian Residents!
You may qualify to receive up to $28,000 to enhance your skills!
THIS IS NOT A LOAN.
Take advantage of this opportunity!
study@thecanadiancollege.ca
416-850-1456 +1 437-223-4505

NACPT PHARMA COLLEGE
O/A North American College of Pharmaceutical Technology
CANADIAN STUDENT VISA PILOT PROGRAM
DLI Institution
MORE INQUIRY:
647 998 7374
info@nacptpharmacollege.com
www.nacptpharmacollege.com
Campus Locations
Toronto: 9 - 5310 Finch Ave East, Toronto, ON M1S 5E8
Brampton: 44 Queen St E, Brampton, ON L6V 1A2

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

REFUGEE ASYLUM SEEKER
சட்டச்சேவை
IRB Hearing Paralegal
BA LLB LLM (Osgoode Law School)
647.766.5189


LIGHT DISPELS DARKNESS
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
மகளிர் கல்லூரி பழைய
மாணவர்கள் பெருமையுடன்
வழங்கும்
முற்றிலும்
புதுமையான நிகழ்வுகளுடன்,
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்
வானவில் 2024
இயல்–இசை–நாடகம்
கோடை காலத்தின் குளிர் தென்றல்
SEPTEMBER 28 SATURDAY 6:00 PM
இரண்டு நாட்கள்
SEPTEMBER 29 SUNDAY 6:00 PM
Armenian Youth Centre
50 Hallcrown Pl. North York, M2J 1P6
பேச்சுப் போட்டி
Saturday, August 24, 2024 at 9:00AM
Talenta Academy
2020 Ellesmere Road, Unit #2, Toronto, ON M1H 2Z8
முதலிடம் பெறுபவருக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
647-760-6689, 416-697-1317,
647-969-1154, 416-918-2464



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

**416 704 1200**

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# அர்ச்சுனா பற்ற வைத்த நெருப்பு

## – அரவின் –

சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம் தான், அண்மையில் இணைய மற்றும் சமூக ஊடகப் பரப்பில் முக்கியமான பேசுபொருளாக இருக்கின்றது.

இரா. சம்பந்தனின் மரணச் சடங்கையும் தாண்டி, இந்த விவகாரம் இலங்கையிலும், புலம்பெயர் தேசங்களிலும் உன்னிப்பான கவனத்தைப் பெற்றிருந்தது.

இன்னும் சொல்லப்போனால், தாயகத்தில் உள்ள மக்களைவிட இதன்மீது அதிக அக்கறை செலுத்துவதும், உன்னிப்பாகக் கவனம் செலுத்துவதும், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள்தான்.

சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம் என்பது பல பரிமாணங்களைக் கொண்ட ஒரு பிரச்சினை.

ஜூன் 14ஆம் திகதி சாவகச்சேரி வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகராக, மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் பொறுப்பேற்றிருந்தார்.

அதற்குப்பின்னர் அவர் அந்த வைத்தியசாலையின் நிர்வாகி என்றவகையில், எடுக்கத் தொடங்கிய நடவடிக்கைகள் அங்குள்ள சகமருத்துவர்களை விசனத்துக்குள்ளாக்கியது.

வைத்தியசாலையில் நிலவிய சீர்கேடுகள், முறைகேடுகளைக் களைவதற்கு அவர் எடுத்த நடவடிக்கைகள்தான் அதற்குக் காரணம்.

வைத்தியசாலையில் பல ஆண்டுகளாக மூடப்பட்டுக் கிடந்த பிரசவ விடுதி, சத்திரச் சிகிச்சைப் பிரிவு போன்றவற்றை மீளவும் இயக்க முற்பட்டபோது, மருத்துவர்கள் அதற்குப் போதியவசதிகள் இல்லை என்று ஒத்துழைக்க மறுத்திருக்கின்றனர்.

வைத்தியசாலையில் இரண்டு மின்பிறப்பாக்கிகள் இருந்தபோதும், அவற்றில் இருந்து மின்சாரத்தைப் பெறுவதற்குப் பதிலாக, தனியானதொரு மின்பிறப்பாக்கி இல்லை என்ற காரணத்தைக் காட்டி, சத்திரச் சிகிச்சைப் பிரிவு இயக்குவதற்கு தடை போட்டிருக்கின்றனர்.



மிகப்பெரிய வைத்தியசாலைக் கட்டுமானங்கள் இருந்தபோதும், சாவகச்சேரி வைத்தியசாலை அங்குவரும் நோயாளிகளை, யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கின்ற இடைத்தங்கல் முகாம்போலவே பெரும்பாலும் செயற்பட்டிருக்கிறது.

இந்தநிலையை மாற்றுவதற்கு, மருத்துவர்கள் ஒத்துழைக்க மறுத்ததுடன், மருத்துவர் அர்ச்சுனாவுடன் முரண்பட்டிருக்கின்றனர். அந்த முரண்பாடு, அவர்மீது தாக்குதல் நடத்தும் அளவுக்குச் சென்றிருந்தது.

இந்தக் கட்டத்தில் அவர், சாவகச்சேரி வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகளையும், அதனை மீள இயக்குவதற்கு தான் எடுத்த முயற்சிகளுக்குக் கிடைத்த பலனையும், அதற்கு எதிராகக் காணப்படுகின்ற எதிர்ப்புகளையும் சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தத் தொடங்கினார்.

இந்தக் காணொளிகள் மற்றும் தகவல்கள் மக்களைப் பெருமளவில் சென்று சேர்ந்தது.

ஒரு பக்கத்தில் உள்ளூரில் கடையடைப்பு, போராட்டம் என்ற நிலைக்கு மக்களை கொண்டுவந்து நிறுத்தியது. இன்னொரு பக்கம், புலம்பெயர் சமூகத்திடையே மிகப்பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த இரண்டு தரப்புக்களுமே, இந்த விவகாரத்துடன் நேரடியாக தொடர்புபட்டிருந்தவை.

தென்மராட்சிப் பகுதி மக்கள், சாவகச்சேரி வைத்தியசாலை சரியாக இயங்காதமையால், பெருமளவில் பாதிப்புகளைச் சந்தித்திருக்கின்றனர்.

அவர்களுக்கு உரிய வைத்திய வசதிகள் கிடைக்கவில்லை. அதிக செலவில் தனியார் வைத்தியசாலைகளை நாடவேண்டியநிலை ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அலைய வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதனால் பிரதேச மக்கள் போராட்டங்களை நடத்தி மருத்துவர் அர்ச்சுனாவுக்கு ஆதரவை வெளிப்படுத்தினர்.

அதேவேளை, புலம்பெயர் தமிழர் மத்தியில், இந்த விவகாரம் அதிகளவில் ஈர்ப்பை ஏற்படுத்தியதற்கு ஒரு முக்கியமான காரணம், சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திப் பணிகள், புனரமைப்புப் பணிகளுக்கு வெளிநாடுகளில் பெருமளவு பணம் திரட்டப்பட்டிருக்கிறது.

இதற்காக, கோடிக்கணக்கான பணம் பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளில் திரட்டப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட பணம் எவ்வாறு செலவிடப்பட்டது என்பது தொடர்பான கணக்கு வழக்குகள்கூட சரியாகக் காண்பிக்கப்படவில்லை என்று, தென்மராட்சி அபிவிருத்தியுடன் தொடர்புடைய சங்கங்கள் பல கூறுகின்றன.

தாங்கள் பெருமளவு பணத்தை அனுப்பியும் அது சரியாகச் செலவிடப்படாதது அவர்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. கோபத்தையும் ஆத்திரத்தையும் உருவாக்கியிருக்கிறது.
இந்த விவகாரத்தில் சாவகச்சேரி வைத்தியசாலை மாத்திரமல்ல, பல்வேறு வைத்தியசாலைகளுக்கும் இதேபோன்று பணம் திரட்டப்பட்டு, புலம்பெயர் நாடுகளில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. அவையும்கூட சரியாகச் செலவிடப்பட்டதா என்ற கேள்வி இருக்கிறது. அந்த வைத்தியசாலைகள் எவ்வாறு இயங்குகின்றன என்ற கவலை அவர்கள் மத்தியில் இருக்கிறது.

இதுபோன்ற காரணங்களால்தான், களத்திலும் புலத்திலும் ஒரே நேரத்தில் சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம் அதிக கவன ஈர்ப்பைப் பெற்றது.

மருத்துவர் அர்ச்சுனா சாவகச்சேரி விவகாரத்தை மாத்திரம் வெளிப்படுத்தவில்லை. வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தொடர்பாகவும் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை மேம்போக்காக எடுத்துக்கொள்ள முடியாது. அது உண்மையா, பொய்யா என்பது ஆராயப்பட வேண்டியது. ஏனென்றால் இலட்சக்கணக்கான மக்களின் உயிருடன் விளையாடுகின்ற செயல் இது.

யாழ்ப்பாணத்தில் புற்றீசல்போல முளைத்துக் கொண்டிருக்கின்ற தனியார் வைத்தியசாலைகள் மக்கள் மத்தியில் இரத்தம் உறிஞ்சும் அட்டைகள்போல மாறிக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில், மிகப்பெரிய போதனா வைத்தியசாலை ஒன்று இருக்கிறது. பருத்தித்துறையிலும் தெல்லிப்பழையிலும், 'ஏ' தர தள வைத்தியசாலைகள் இரண்டு இருக்கின்றன. சாவகச்சேரியிலும், ஊர்காவற்துறையிலும் 'பி' தர தள வைத்தியசாலைகள் இரண்டு இருக்கின்றன.

இவை தவிர மாவட்ட வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள் என ஏராளமான அரசாங்க வைத்தியசாலைகள் இருக்கின்றன. இந்த வைத்தியசாலைகள், போர்க்காலத்தில் எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல், பெரும் சேவை ஆற்றியவை.

ஆனால் இப்போது இங்கு முன்னரைவிட அதிக வசதிகள், நவீன தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

அரசாங்கம் கொடுத்தவை ஒருபுறம், வெளிநாட்டு அரசாங்கங்கள், உதவி நிறுவனங்கள் கொடுத்தவை மற்றொரு புறம், அந்தந்த பிரதேச அபிவிருத்திச் சங்கங்கள் புலம்பெயர் தமிழர் கொடுத்தவை இன்னொரு புறமாக பல்வேறு முனைகளில் இருந்து கிடைத்த உதவிகளைக் கொண்டு, அரசாங்க வைத்தியசாலைகள் பெருமளவில் கட்டடங்களையும் கருவிகளையும் கொண்டிருக்கின்றன.

ஆனால் இவை சரியாக மக்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பதுதான் பிரச்சினை. இந்த மருத்துவமனைகளை இயக்குவதற்குப் போதிய மருத்துவர்கள் இல்லை. தொழில்நுட்பவியலாளர்கள் இல்லை. தாதிமார் இல்லை. இது ஒரு பிரச்சினை.

மருத்துவர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், தாதிமார் போன்ற ஆளணி வளங்களைக் கொண்டிருக்கின்ற வைத்தியசாலைகளில் கூட, முழுமையான சிகிச்சை அளிக்கின்ற சூழல் இல்லை. சாவகச்சேரியில் அதுதான் நடந்தது.

சாவகச்சேரி வைத்தியசாலையைப் போலவே, பருத்தித்துறை தள வைத்தியசாலையும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அங்கு மருத்துவர்கள் இருக்கின்றனர். ஆனாலும் பெரும்பாலான நோயாளிகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கின்ற பணியைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர்.
அண்மையில், இந்த வைத்தியசாலையில், நெதர்லாந்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட, விபத்து சிகிச்சைப் பிரிவு, பெண் நோயியல் பிரிவு என்பன முழுமையான தொழில்நுட்ப வசதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் இது இப்போது முழுமையாக இயங்குகிறதா? நோயாளிகளுக்கு முழுமையாக சேவையாற்றுகிறதா? என்றால் இல்லை என்றே கூற வேண்டும்.

இதேபோன்று, கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்ட பெண் நோயியல் பிரிவும் இப்போது மூடப்பட்ட நிலையிலேயே இருக்கிறது.

கட்டடங்கள் இல்லை, தொழில்நுட்பக் கருவிகள் இல்லை போன்ற காரணங்களைக் கூறி, மருத்துவ வசதிகளைத் தட்டிக் கழித்த நிலை மாறி, மருத்துவ

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## பிரித்தானியாவில்.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

முறை 2019ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 67.3%ஆனோர் வாக்களித் திருந்தது குறிப்பிடத்தக்கது.



Keir and Victoria Starmer

இம்முறை தொழிற்கட்சி 412 ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் அது 2019ஆம் ஆண்டில் 202 ஆசனங்களைப் பெறும்போது பெற்ற 32.0% வாக்குகளைவிட 1.7% வாக்குகளையே அதிகமாகப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் பிரித்தானியாவின் வரலாற்றிலேயே அதிகுறைவான வீத மக்களின் வாக்குகளைப் பெற்று பெரும்பான்மை அரசை அமைத்த முதலாவது அரசாக இந்த அரசாங்கம் அமைகிறது. அத்துடன் தற்போதைய தொழிற்கட்சி அரசு 1997ஆம் ஆண்டில் Tony Blair தலைமையிலான தொழிற்கட்சி அரசு பெற்ற 418 ஆசனங்களைவிட 6 ஆசனங்கள் குறைவாகப் பெற்று இரண்டாவது அதிகூடிய ஆசனங்களைப் பெற்ற தொழிற்கட்சி அரசாக வருகிறது.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் 4,515 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 3,121 ஆண்களும், 1,385 பெண்களும் மற்றும் 9 பேர் இருபாலும் அற்றவர்களாகும். எந்த ஒரு கட்சியும் 650 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நியமிக்கவில்லை. பழமைவாதக்கட்சி 635 தொகுதிகளிலும் தொழிற்கட்சி 632 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நியமித்திருந்தன.

தொழிற்கட்சி வேட்பாளர்களில் 47% பெண்களாவர். இதுவே அதிக பெண்களை வேட்பாளர்களாக நியமித்த கட்சியாகும்.



Former Prime Minister Rishi Sunak and Akshata Murty

பழமைவாதக்கட்சி வேட்பாளர்களில் 34% பெண்களாவர். முதல்தடவையாக பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு அதிக அளவு பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட தேர்தலாக இம்முறை நடைபெற்ற தேர்தல் வருகிறது. இம்முறை தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் 263 பேர் (40%) பெண்களாவர். இதற்கு முன்னர் 2019இல் 220 பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

தொழிற்கட்சியில் இருந்து அதிகப்படியான பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 96 பேர் தெரிவாகியிருக்கின்றனர். அடுத்ததாக லிபரல் ஜனநாயகக் கட்சியில் இருந்து 22 பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்.

இம்முறை பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு தெரிவான 650 உறுப்பினர்களில் 335 பேர் முதன்முறையாக நாடாளுமன்றம் செல்கின்றனர். 2019இல் நடைபெற்ற தேர்தலில் 140 உறுப்பினர்களே முதன்முறை நாடாளுமன்றம் சென்றவராவர்.

இம்முறை சிறுபான்மை இனத்தவர்களைச் சேர்ந்த 90 பேர் (14%) பிரித்தானிய நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர். 2019ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் தெரிவானோரில் 66பேர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகும். பிரித்தானியாவின் சனத்தொகையில் 2021ஆம் ஆண்டு நடத்திய கணக்கெடுப்பின்படி 18%ஆனோர் தாங்கள் சிறுபான்மை இனத்தவர் (வெள்ளை இனம் அல்லாதவர்) எனத் தெரிவித்திருந்தனர். இதனால், இம்முறை



Sam Carling - The youngest MP who was born in 2002.

பிரித்தானிய நாடாளுமன்றம் நாட்டின் பன்முகத்தன்மையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. இம்முறைதான் முதன்முறையாக இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்ணான உமா குமரனும் தொழிற்கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மை இனத்தவர்களை அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களாகக்கொண்ட கட்சியாக தொழிற்கட்சி இருக்கிறது. இதில் 66பேர் சிறுபான்மை இனத்தவராவர். அடுத்தபடியாக பழமைவாதக் கட்சியில் 15பேர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினராவர்.

வயதுகூடிய நாடாளுமன்ற உறுப்பினராக பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த 80 வயது Sir Roger Gale தெரிவாகியுள்ளார். வயது குறைந்த உறுப்பினராகவும், 21ஆம் நூற்றாண்டில் பிறந்த முதலாவது பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினராகவும் 22வயது Sam Carling தெரிவாகியுள்ளார். இவர் ஏற்கனவே நகர சபை உறுப்பினராக இருந்துள்ளார்.

தொழிற்சட்சிக்குத் தலைமைதாங்கி இம்முறை நடைபெற்ற தேர்தலில் வென்று பிரதமரானவர் Sir Keir Rodney Starmer. இவர் லண்டனில் 1962 செப்ரெம்பர் 02ஆம் திகதி பிறந்தவர். Leeds பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் இளமானிப் பட்டம் பெற்று பின்னர் Oxford பல்கலைக்கழகத்தில் பிற்பட்டப் படிப்பாக குடிசார் சட்டவியல் பயின்று பட்டதாரியானார். இவர் 16 வயதில் இருந்தே தொழிற்கட்சியில் ஈடுபாடு உடையவர்.

பட்டப்படிப்பை முடித்த பின்னர் மனித உரிமைகளில் நிபுணத்துவம் பெற்று சட்டத்தரணியாகத் தொழிலில் ஈடுபட்டார். இவர் சட்டத்தொழிலில் செய்த சேவைக்காக 2014ஆம் ஆண்டு Knightஆக நியமனம் பெற்றார். 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் Keir Starmer பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு உறுப்பினராக முதலில் தெரிவானார். 2019இல் நடைபெற்ற தேர்தலில் தொழிற்கட்சி தோல்வியுற்று அதன் தலைவர் Jeremy Corbyn பதவி விலகியபோது ஏற்பட்ட வெற்றிடமான தொழிற்கட்சித் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டு வென்றார். 2020ஆம் ஆண்டில் இருந்து தொழிற்கட்சியின் தலைவராகவும், நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராகவும் தற்போதைய தேர்தல்வரை பதவி வகித்தார்.

Keir Starmer 2007 மே மாதம் Victoria Alexanderஐத் திருமணம் செய்தார்.



Uma Kumaran

அவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளுமாக இரு பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்கள் தாயின் மதமான யூத மத வழக்கத்தில் வளர்ந்து வருகின்றனர். அவர்களும் தாயைப்போல தாவர உணவு மட்டும் உண்பவர்களாகவே வளர்க்கப்படுகின்றனர். Keir Starmer தாவர உணவுடன், கடல் உணவையும் உண்பவராகவும் சமய நம்பிக்கையற்றவராகவும் (atheist) இருக்கிறார். அவர் மனித உரிமைகள் சம்பந்தமாக பல புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.

இம்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பல தமிழர், பல கட்சிகளில் போட்டியிட்டிருந்தனர். தொழிற்கட்சியின் சார்பில் Stratford and Bow தொகுதியில் போட்டியிட்டு வென்றவர் உமா குமரன். இவரது பெற்றோர் இலங்கையில் இருந்து பிரித்தானியாவிற்கு 1980இல் அகதிகளாக குடிபெயர்ந்தவர்கள். இவரே பிரித்தானிய நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இலங்கைத் தமிழர் வம்சாவளியைச் சேர்ந்தவராவார். உமா குமரன் லண்டனில் பிறந்தவர். Queen Mary பல்கலைக்கழகத்தில் இளம்கலைமானிப் பட்டமும் பின்னர் பொதுக் கொள்கையில் (Public Policy) முதுமானிப்பட்டமும் பெற்றவர். பட்டப்படிப்பின் பின்னர் அவர் சுகாதாரத்துறையில் பணிபுரிந்தார். இவர் 2009ஆம் ஆண்டில் இருந்தே தொழிற்கட்சியுடன் இணைந்து செயற்பட்டார்.

2010ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றத்திற்கான தேர்தலிலும் பின்னர் 2015ஆம் ஆண்டில் பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலிலும் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இம்முறை நடைபெற்ற தேர்தலில் தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்ட உமா குமரன் 19,145 வாக்குகளைப் பெற்று 11,634 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டினார். இவரது வெற்றிக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

“தமிழ் அகதிகளின் பிள்ளை நான், பாரபட்சத்தையும், ஒடுக்குமுறையையும் அனுபவித்த ஒரு சமூகத்தின் பிள்ளை நான், நியாயத்திற்காக எப்போதும் நான் போராடுவேன்” என்று தனது தேர்தல் வெற்றி உரையின்போது உமா குமரன் கூறியிருந்தார்.

# பொதுக் கூட்ட அறிவித்தல்

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவும் ஜுலை 20, 2024 சனிக்கிழமை காலை 10:30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வு நடைபெறும் இடம் பற்றிய விபரங்களை பின்பு அறியத் தருவோம். பொதுக் கூட்டத்தில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் பங்கேற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அங்கத்துவத்தை புதுப்பிப்பதற்கும், நிர்வாகசபை உறுப்பினர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கும், உரிய இறுதித் திகதி ஜுலை 12, 2024. நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்களை ஜுலை 12, 2024இற்கு முன் கிடைக்கத்தக்கதாக akanisuresh@gmail.com அல்லது vathani.suntha@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அகணி சுரேஸ், தலைவர் - **416.732.8021**/ akanisuresh@gmail.com
கமலவதனா சுந்தா, செயலாளர் - **647.765.9761**/ vathani.suntha@gmail.com
ரவி கனகசபை, பொருளாளர் - **416.301.9027** / kana-ravi@hotmail.com

# ஏமாற்றப்பட்ட சம்பந்தன்

**– முகிலன் –**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக, எதிர்க்கட்சித் தலைவராக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக, நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிவகித்த இரா. சம்பந்தன் கடந்த ஜூன் 30, 2024ஆம் திகதி இரவு தனது 91ஆவது வயதில் காலமானார்.

2009ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்திற்குத் தலைமையேற்றிருந்தவர் அவர்.

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும், ஆயுதப் போராட்டத்தின் போதும், அதற்குப் பின்னருமாக, மூன்று வெவ்வேறு காலச் சூழல்களில் அவர் அரசியலில் இருந்தவர். நீண்டகால அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட அவர், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த காலகட்டத்தில் சர்வதேச அளவில் மதிக்கப்படுகின்ற ஒரு தலைவராகவும் காணப்பட்டார்.

இரா. சம்பந்தன் மறைந்த செய்தி கேள்விப்பட்டவுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தனது எக்ஸ் பக்கத்தில் இரங்கல் குறிப்பைப் பகிர்ந்திருந்தார்.

அதுபோலவே, பல்வேறு நாடுகளின் இராஜதந்திரிகளும் அவருக்கு அஞ்சலி செலுத்த வந்திருந்தனர்.

கொழும்பில் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோதும், நாடாளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போதும், திருகோணமலையில் இறுதிக் கிரியைகளின்போதும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் தூதுவர்கள் இரா. சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இது அவர் எந்தளவுக்கு சர்வதேச இராஜதந்திரிகளுடன் ஊடாடி இருக்கிறார், அவர்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறார், தொடர்புகளை வைத்திருந்திருக்கிறார் என்பதை வெளிக்காட்டியிருக்கிறது. அதேபோலத்தான், இரா.சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க தொடக்கம் ஏராளமான சிங்கள அரசியல் தலைவர்களும் படையெடுத்து வந்தனர்.

சிங்களத் தலைவர்கள் வெளியிட்ட இரங்கல் குறிப்புகளும் சரி, நிகழ்த்திய உரைகளும் சரி அவர்களின் நம்பிக்கையை இரா.சம்பந்தன் எந்தளவுக்குப் பெற்றிருந்தார் என்பதை வெளிக்காட்டி இருக்கிறது.

சிங்களத் தலைவர்கள் எவருமே இரா. சம்பந்தனை பிரிவினைவாதத் தலைவராகப் பார்க்கவில்லை. தனி நாட்டைக் கோருகின்ற தலைவராகப் பார்க்கவில்லை. நாட்டைப் பிரிக்க முயன்ற தலைவராகப் பார்க்கவில்லை.

அவர் பிளவுபட்ட நாட்டை ஒன்றிணைக்கப் பாடுபட்டார். பிரிக்கப்படாத, பிரிக்கமுடியாத இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வுக்குப் பாடுபட்டார். அவரது நோக்கம், பிளவுபடுத்தப்படாத நாடுதான், பிரிக்கப்படாத நாடுதான் என்று சிங்களத் தலைவர்கள் ஒவ்வொருவரும் இப்போது பாடம் எடுக்கின்றனர்.



இப்படிச் சிங்களவர்களாலும் கொண்டாடப்படும், ஒரு தலைவராக இரா.சம்பந்தன் இருந்திருக்கிறார். ஆனால் அவர், தமிழரால் கொண்டாடப் படக்கூடிய நிலையில் இருந்தாரா? மறையும்போது அவ்வாறு கொண்டாடப் பட்டாரா? மறைந்த பின்னர் அவருக்காகத் தமிழினம் துக்கித்து நின்றதா? என்பன போன்ற கேள்விகள் இங்கே முக்கியத்துவமானவை. ஏனென்றால், இரா. சம்பந்தனுக்கு சர்வ தேச மட்டத்தில், சிங்களத் தலைவர்கள் மத்தியில் காணப்பட்ட நல்லபிப்பிராயம் ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கம் மோசமானதாகவே இருக்கிறது.

அந்தப்பக்கம், தமிழரின் நலன் சார்ந்து அவர் எந்த அளவுக்குப் பாடுபட்டார் என்பதை வைத்தே எடை போடப்படுகிறது. இரா. சம்பந்தனை சிங்களத் தலைவர்கள் முழு நாட்டுக்குமான ஒரு தேசியத் தலைவர் என்கின்றனர். ஆனால் அவர் அடிப்படையில் அப்படிப்பட்ட ஒரு தலைவராக இருப்பதற்காக, தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல.

அவர் தமிழரால், தமிழரின் உரிமைக்காக, தமிழரின் நலன்களுக்காகப் போராட வேண்டிய ஒரு தலைவராகவே தெரிவு செய்யப்பட்டிருந்தார். அந்த நோக்கத்தில் அவர் வெற்றி பெற்றிருக்கவில்லை என்பதுதான் துரதிர்ஷ்டம்.

அந்த நோக்கத்தில் அவர் வெற்றியைப் பெற்றிருந்தால், அவரது மரணம் வடக்கு, கிழக்கில் மிகப் பெரிய துக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். வடக்கு, கிழக்கை முற்றாகத் ஸ்தம்பிக்க வைத்திருக்கும்.

ஆனால், இரா. சம்பந்தனின் மறைவுக்குப் பின்னர், வடக்கு, கிழக்கு அப்படித் துக்கத்தில் துவண்டு போகவோ, ஸ்தம்பித்துப் போகவோ இல்லை. எல்லாமே இயல்பாகத்தான் இருந்தன.

அவரது உடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட போதும் சரி, இறுதிக்கிரியைகள் நடந்து கொண்டிருந்தபோதும் சரி, பெரும்பாலான தமிழ் மக்கள் அதையிட்டு அக்கறை கொண்டிருக்கவில்லை. அவர்கள் தம் பாட்டில், தம்போக்கில் இயங்கிக் கொண்டிருந்தனர்.

ஏனென்றால் அவர்களுக்கு இரா. சம்பந்தனின் மரணம் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. உணர்வுபூர்வமாக ஒரு காயத்தை ஏற்படுத்தவில்லை. வலிமிக்க ஒரு நிகழ்வாக அமைந்திருக்கவில்லை.

அவர் தமிழ் மக்களின் தலைவராகத் தனது கடமையை நிறைவேற்றியிருந்தால், இப்படிப்பட்ட ஒரு சூழல் நிச்சயமாக இருந்திருக்காது.

அப்படிப் பார்க்கும்போது, இரா. சம்பந்தன் சரியான தமிழர் தலைவராக இருந்திருக்கவில்லை என்றுதான் கூற வேண்டும்.

அவர் சர்வதேச இராஜதந்திரிகளுக்கு நல்லபிள்ளையாக இருக்க விரும்பினார். சிங்களத் தலைவர்களுடனும் நல்லவிதமாக நடந்துகொள்ள முற்பட்டார். ஆனால், தமிழ் மக்களுக்கு நல்லதொரு தலைவராகச் செயற்பட வேண்டும் என்ற பிரதான கடப்பாட்டை மறந்து போயிருந்தார்.

அதுவும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி அவருக்குக் கிடைத்த பின்னர், அவர் முழுமையாகவே மாறிப் போனார், மாற்றப்பட்டார்.



சிங்களத் தலைவர்களின் நம்பிக்கையினை பெற்றுக்கொள்வதன்மூலம், தமிழர் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று முட்டாள்த்தனமாக நம்பிக்கை வைத்திருந்தார்.

தமிழர் பிரச்சினைக்கு நிலையானதொரு தீர்வு காண வேண்டும் என்றால், அதற்கு சிங்களவரும் மனமுவந்து ஒத்துழைக்க வேண்டும்.

தமிழருக்கான உரிமையை, தமிழருக்கான அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில், அவர்கள் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அவ்வாறு இல்லாமல் எந்தவொரு தீர்வையும் எட்ட முடியாது.

அப்படி வலுக்கட்டாயமாகப் பெறக்கூடிய தீர்வும் நிலையானதாக இருக்காது. இது சரியான கருத்துத்தான். இதனைத்தான் சம்பந்தன் வலியுறுத்தினார்.

இந்த வழியில் சென்றால் மாத்திரமே தீர்வைப் பெறமுடியும் என்று நம்பினார். அதனால் அந்த வழியிலேயே அவர் முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

சிங்களத் தலைவர்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காகவே அவர் தனது அரசியலை முன்னெடுத்தார். அந்த இடத்தில்தான் அவர் தவறிழைத்தார்.

அவர் தமிழ் மக்களின் நலனைப்பற்றி அக்கறைகொள்ளாமல் அல்லது அதனைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் செயற்பட்டார்.

அதனால் அவருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே ஒரு மிகப்பெரிய இடைவெளி தோன்றியது. அந்த இடைவெளிதான் இரா. சம்பந்தனின் மரணத்தைக் கண்டு கொள்ளாமல் போகின்ற நிலை, தமிழர் பகுதிகளில் காணப்பட்டதற்கு அடிப்படைக் காரணம்.

இந்த இடத்தில் இரா. சம்பந்தன் சிங்களத் தலைவர்களை நம்பி முற்றுமுழுதாக ஏமாந்து போனார் என்பதுதான் சரியானது. அவர்கள் தீர்வைத் தருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், கடைசிவரை அவர்கள் அதனைச் செய்யவே இல்லை. அவர் மரணித்த பின்னர், அவர் பிளவு படாத நாட்டுக்குள்தான் அதிகாரங்களைக் கோரினார் என்று புகழாரம் சூட்டுகின்ற சிங்களத் தலைவர்கள், அவரை ஏன் பயன்படுத்திக்கொள்ளத் தவறினார்கள்?

அதிகபட்ச விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளக்கூடிய ஒரு தலைவரை பயன் படுத்திக்கொண்டு ஏன், இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணத் தவறினர்?

இது ஒன்றும் சிக்கலான கேள்வி அல்ல. இரா. சம்பந்தன் அவர்களை மிகையாக நம்பினார். அவர்களும் அவரை நம்பினர்.

ஆனால் அதனைவிடப் பெரிய உண்மை ஒன்று உள்ளது. அவர்கள் இரா. சம்பந்தனை நன்றாகவே ஏமாற்றினார்கள் என்பதே அது.

இதனால்தான் அவர்கள் தீர்வை வழங்கவும் இல்லை, இரா. சம்பந்தனால் தீர்வைப் பெற முடியவுமில்லை.

இந்த ஏமாற்றம், தமிழ் மக்களுக்கு இரா. சம்பந்தன்மீது பிடிமானத்தை ஏற்படுத்தவில்லை. அது அவரது நீண்ட அரசியல் வரலாற்றைக் கறைபடிந்ததாக மாற்றி விட்டது.



# தமிழரின் சர்வதேச புலம்பெயர்தலும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## மலேசியா

இலங்கைத் தமிழர் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழரது குடிபெயர்வுக்குரிய முன்னுரிமை பெற்ற நாடுகளில் ஒன்றாக மலேசியா விளங்குகின்றது.

முன்னைய மலேசியாவில் புகையிரத சேவை, கட்டிட நிர்மாணம், மருத்துவ சேவை, எழுதுவினைஞர் சேவை போன்ற வற்றில் இலங்கைத் தமிழர் 1800களில் அதிக வாய்ப்பைப் பெற்றனர். கோலாலம் பூரில் கணிசமானளவு இலங்கைத் தமிழர் அக்காலத்திலேயே மதிப்புமிக்க தொழில் மற்றும் வாழ்க்கையைப் பெற்றிருந்தனர்.



அதிகளவு பொறியியலாளர்களாகவும், வைத்தியர்களாகவும் எம்மவர்கள் இருந்த னர். மலேசியா, சிங்கப்பூர் நீதி, நிர்வாகத் துறை உயர் பதவிகளில் இலங்கைத் தமிழர் சிறப்புப் பெற்று இருந்தனர்.

1963இல் மலேசியா உருவானது. 26 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. அங்குள்ள மொழிகளில் தமிழ் மொழியும் முக்கியமானது. பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட சட்டபூர்வமற்ற குடியேறிகள் இருந்தனர். அங்கு நிலவிய தொழிலாளர் பற்றாக்குறை இதற்குக் காரணமாகும். மூன்று இலட்சம் இத்தகைய அகதித் தொழிலாளர்கள் அங்கு பணிபுரிந்தனர்.

1947இல் இங்கு ஆறு இலட்சம் தமிழர் வாழ்ந்தனர். 1957இல் இவர்கள் தொகை 820,000ஆக அதிகரித்தது. இலங்கைத் தமிழரும் இதில் அடக்கம்.

1970களிலிருந்து கல்வித்துறையிலும் தொழில்வாய்ப்புத் துறையிலும் மலேசியா அதிக முன்னேற்றங்களைக் காட்டி நிற் கிறது. தற்போது உயர்கல்வி, திருமணம், தொழில்வாய்ப்பு என்ற பலவகையிலான தொடர்புகளுக்காகவும் இலங்கைத் தமிழர் விரும்பிச் செல்கின்ற நாடுகளில் ஒன்றாக மலேசியா விளங்குகிறது.

## சிங்கப்பூர்

மலாயாக் குடாநாட்டின் தெற்கு முனையில் இணைந்திருக்கும் நாடுதான் சிங்கப்பூர். வணிகக் குடியிருப்பாளர்களினால் 1819இல் உருவானதே சிங்கப்பூர். ஆசியாவின் மிகவும் முக்கியமான வர்த்தக நிலையங் கள் இங்கேயே குவிந்துள்ளன. 1947இல் சுதந்திரம் பெற்றது. தற்போதைய சிங்கப்பூர் குடியரசு 1965இல் உருவானது.

ஏறக்குறைய ஐந்து மில்லியன் குடித்தொகை இங்கு உள்ளது. இதன் நிலப்பரப்பு 250சதுரமைல் பரப்புக் கொண்டது. இலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்துக்குச் சமமானது.

தமிழ்மொழியும் அரச அங்கீகாரம் பெற்ற மொழியாகவுள்ளது. இலங்கைத் தமிழ் இளைஞர்கள் குறிப்பாக தகவல் தொழில் நுட்பப் பட்டதாரிகள் தொழில் வாய்ப்புக் காகவும், குடியுரிமைக்காகவும் நாடும் முன்னுரிமைக்குரிய நாடாக இது விளங்குகிறது.



இங்கு தமிழ்ப்பிள்ளைகள் தமிழ்மொழி யைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும். இலங்கைத் தமிழ் வம்சாவழியினர் பலர் சிங்கப்பூரில் அமைச்சர்களாக இருந்துள் ளனர், இப்போதும் உள்ளனர்.

சிங்கப்பூரில் உயர் தொழில்நுட்பக் கைத் தொழில்கள், உயர் தொழில்நுட்பவியல் துறைகளின் அபரிமிதமான வளர்ச்சி இலங்கையில் யுத்தம் முடிவுற்ற 2009 காலப் பகுதியிலிருந்து அதிக இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இந்த நாட்டுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர்.

## கனடா

இலங்கைக்கு வெளியே இலங்கைத் தமிழர் அதிகளவில் குடியேறி வாழ்கின்ற நாடு கனடாதான். நான்கு இலட்சம் பேர் இங்கு வாழ்கின்றனர். ரொறொன்ரோவில் மாத்திரம் மூன்று லட்சம் இலங்கைத் தமிழர் உள்ளனர். (V. Rajalingam, 2016 p215). இவர்கள் கவனஈர்ப்புக் குரிய சிறுபான்மையினராவர்.

ஐக்கிய அமெரிக்காவுக்கும், ஆர்டிக் சமுத்திரத்துக்கும் இடையில் பரந்து கிடக்கும் நிலப்பரப்புக் கொண்டது கனடா. பிரெஞ்சு மொழி பேசுகின்ற கியூபெக் மாகாணமும் இதில் இணைந்துள்ளது. 1867இல் இது உருவானது. இதன் மொத்தக் குடித்தொகை தற்போது 40 மில்லியன் வரையிலேயே காணப்படுகிறது. 3,851,788 சதுர மைல் பரப்பளவு கொண்ட இந்த நாட்டில் ஒரு சதுர மைலுக்கு 9பேர் மாத்திரமே உள்ளனர். இது உலகின் இரண்டாவது பெரிய நாடு என்ற பெருமையுடையது. கனடா கொமன்வெல்த் அங்கத்துவம் கொண்ட நாடாயிருப்பதுடன் பரந்துபட்ட நலன்புரி வசதிகளை வழங்குவதாயும் உள்ளது. ஆனாலும் ஆங்கில மயமாக்கத்திலிருந்து தனது மொழியை (பிரெஞ்சு)யும் பண்பாட்டின் தனித்தன்மை யையும் கியூபெக் பேணிக் கொள்கிறது.

குடியேறத் துடிக்கின்ற அகதிகளை பெரு மனதுடன் விரும்பி, அனுமதிப்பதோடு, சொந்தப் பண்பாட்டைப் பேணுவதற்குரிய உரிமையையும், வசதிகளையும் கனடிய அரசு வழங்கி வருகிறது. பாரம்பரிய பூர்விகக் குடிமக்கள் நிலப்பரப்பு 1999இல் அங்கீகரிக்கப்பட்டது. வணிகம், அரசாங்கம் என்ற துறைகளில் பெண்களுக்கு சிறந்த வாய்ப்பும் வசதிகளும் வழங்குவதில் கனடா முன்னிலையில் நிற்கிறது.



கனடா அதிகளவு எண்ணெய் வயல்கள் கொண்டது. பரந்துபட்ட வளங்கள், திருப்தி தரும் ஏற்றுமதி கொண்டது. செல்வப் பங்கீட்டில் அதிக ஏற்றத்தாழ்வு காணப் படுவதில்லை. நாப்ரா (NAFTA)வில் இணைந்து செயல்படுவதால் உலகப் போட்டியை அதிகம் எதிர்கொள்கிறது.

உலகில் அதிக கல்வி கற்ற மக்கள் (66%) இந்த நாட்டில் உள்ளனர். 14 - 28 வயதுக்குரிய எமது மாணவர் படை இங்கு நன்கு கல்வி பெறுகின்றனர்.

ரொறொன்ரோ பெருநகரில் இலங்கைத் தமிழர் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர். ஏராளமா னோர் தொழில் முனைவோராக வளர்ச்சி பெற்றுள்ளனர். உணவகங்கள், சிறப்பு வணிக வளாகங்களின் (Super Markets) உரிமையாளர்கள், மெய்ச் சொத்து முகவர்கள், வழக்கறிஞர்கள், வைத்தியர் கள், வங்கியாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எனப் பல நிலைகளில் பெருவளர்ச்சியும், பெருமையும் பெற்று வாழ்கின்றனர்.

ஊடகத்துறையில் இலங்கையில் சாதிக்க முடியாததை ஏராளமான இலங்கைத் தமிழர் இங்கு சாதிக்கின்றனர். பத்து புதினப் பத்திரிகைகள் வெளியிடப்படு கின்றன. நான்கு தமிழ் வானொலிகள் செயல்படுகின்றன. மூன்று தொலைக் காட்சி நிறுவனங்கள் இயங்குகின்றன.

தமிழ் சினிமா தயாரிக்கும் முயற்சிகளில் அதிகமானோர் ஈடுபட்டு வருகின்றனர். கனடாவிலும், தமிழகத்திலும் படங்களைத் தயாரிப்பதில் கனடியத் தமிழர் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

தமிழரிடையே வார இதழ்கள், இலவச இதழ்கள், சஞ்சிகைகள் அதிகம் வெளி வருகின்றன.

கனடியத் தமிழரில் எண்பது சதவீத மானோர் ஈழத்தமிழரே. ஏராளமான கோவில்களும், தமிழிசைக் கலாமன்றங் களும், பழைய மாணவர் மன்றங்களும், எழுத்தாளர் ஒன்றியங்களும் அதிக செயல்திறனுடன் இயங்கி வருகின்றன. இலங்கைத் தமிழரின் இரண்டாம் தலை முறையினரின் நடப்பியல் தாயகமாகக் கனடாவும், ஆத்மீகத் தாயகமாக ஈழமும் காணப்படும் என்று நம்பமுடியும்.



மூன்றாம் தலைமுறையினரைப் பொறுத்தவரை, தொல் தாயகமாகவும், நேசத்துக்குரிய புனித சுற்றுலாவுக்குரிய பிரதேசமாகவும் இலங்கையின் வடக்குக் கிழக்கு பிரதேசம் உணரப்படும். தம் மூதாதையர்களின் வாழ்விடங்களையும், அவர்கள் வழிபட்ட கோவில்களையும் பார்த்து அதன் பெருமைகளை ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் தமது பிள்ளைகளுக்கு விபரிப்பர் என்றே எண்ணவேண்டும். இது இயல்பான மாற்றம்தான். சமூக அசைவியக்கம் இதுதானோ.

தாயகத்தில் முதல் தலைமுறை குடும்பம் குடும்பமாக செம்மண் பூமியில் தோட்டம் செய்ததுபோல, கனடாவின் பனிவிழும் குளிர் நிலத்தில் குடும்பம் குடும்பமாகத் தொழில்களைத் தொடக்கி நிர்வகிப்பதில் மூன்றாம் தலைமுறை ஆற்றலும், திருப்தியும் கொண்டு விளங்குவர்.

ரொறொன்ரோவில் இருபத்தியிரண்டாவது மொழியாகத் தமிழ் மொழியுள்ளது. ஆங்கி லத்திலும், பிரெஞ்சிலும் பள்ளிக் கல்வி யையும், பல்கலைக்கழகக் கல்வியையும், தொழில்நுட்பவியல் கல்வியையும் பெறுவதில் அதிக ஆர்வமும், திருப்தியும் கொண்டு செயல்படுகின்றனர்.

மூன்றாம் தலைமுறையினர் பெற்றோர் தலையீடின்றி கல்வி பற்றிய முடிவுகளைத் தாமாக மேற்கொள்ளும் குடியியல் பண்பு பெற்றுள்ளனர். மருத்துவம், பொறியியல், மனிதவள முகாமைத்துவம், செயற்கை மதிநுட்பம், பட்டயக் கணக்கியல், சட்டம் போன்ற துறைகளில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் அதிக வளர்ச்சியை இவர்கள் வெளிப்படுத்துவர். ஆனாலும் இவை பற்றிய புள்ளிவிபரக் கணிப்பு கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என கல்விமான்கள் கருதுகின்றனர்.

(தொடரும்)

# நாமும் நமது இல்லமும் 658

# அடுக்கு மாடிக் குடியிருப்புகள்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

## SINGLE STAIR APARTMENTS

கனடாவில் பொதுவாக பிரிட்டிஷ் கொலம்பியா குறிப்பாக வன்கூவர் நகரம், எந்த விடயத்திலும் முன்னிற்பதனைக் காணலாம். அதனைத் தொடர்ந்து ஒன்ராறியோ பிற்பாடு மற்றைய மாகாணங்கள். இவ்வாறே ஆதன விலையும் வன்கூவரில் அதிகமாக இருக்கும். அதன் பிற்பாடே ஒன்ராறியோ மாகாணத்தில் காணப்படும். இதுவே இயல்பானதாகும்.

ஆதன வியாபாரத்திலும், ஆதன நிர்மாணத்திலும் புதிய செய்முறைகளை முதலில் பரிசீலிப்பதில் பிரிட்டிஷ் கொலம்பியா முன் நிற்கும்.

இந்தவகையில், பிரிட்டிஷ் கொலம்பியா, கட்டிட நிர்மாணத்திற்குப் பாவிக்கப்படும் செயல்முறைப்பாட்டில் (கட்டிடக்குறியீடு - Building Code) மாற்றத்தை ஏற்படுத்த உள்ளது.

கனடாவில் குறிப்பாக வன்கூவரில் ஏற்பட்டுள்ள, ஆதனப் பற்றாக்குறையை (Shortage) நீக்குவதற்காக சில மாற்றங்களை ஏற்படுத்த உள்ளதாகத் தெரியவருகின்றது.

சாதாரணமாக அடுக்குமாடிக் கட்டிடத்தில், கட்டிடத்தின் இரு பகுதிகளிலும் படிகள் (staircases / steps) இருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தமுறை 1941ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது. இதுவே கனடாவின் நிர்மாண நடைமுறையாகும்.

தற்போது ஒரு பகுதியில் மட்டும் படிகளை (staircases / stair uses) வைப்பதற்கான மாற்றத்தைக் கொண்டுவர உள்ளதாக, ஆதனம் சம்பந்தமான பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண மந்திரி (Housing Minister) தெரிவித்துள்ளார். இந்த ஒரு பகுதியிலான படிகள், 1974ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில், வன்கூவருக்கு அண்மையில் இருக்கும் சியாற்றில் (Seattle) (Washington State) நகரத்தில் நடைமுறையிலிருந்து வருகின்றது.



மந்திரி இதுபற்றிக் கூறும்போது, சில நிபந்தனைகளை வைக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார். கட்டிடத்தில் ஆகக் கூடியதாக ஆறு (6) மாடிகளும், ஒவ்வொரு அடுக்குகளிலும் (Each Floor) ஆகக்கூடியதாக நான்கு (4) மனைகள் மட்டுமே இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மாற்றம் செய்வதால், பொருளாதாரரீதியில் நிர்மாணிப்பதற்குக் குறைந்த செலவில் கட்டி முடிக்கலாம் என்றும் தெரிவித்தார். அத்துடன் அதிக வெளிச்சத்தை மனைகளுக்குக் கொண்டுவருவதற்கான சந்தர்ப்பங்களே அதிகம். இலகுவாக, நிலத்தை வாங்கி விரைவாக நிர்மாணிக்கக்கூடிய வசதிகள் அதிகம். எனவே மாற்றம் தேவையானதாகவே கட்டிட ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இது நடைமுறையில் சிறப்பாகலாம்.

### மூன்று சந்ததிகள் ஒரே வீட்டில்....

அதிக வட்டிவீதம், விலையின் அபரிமிதமான அதிகரிப்பு ஆதனம் வாங்குவது புதியவர்களுக்கு மிகவும் நெருக்கடியைக் கொடுத்து உள்ளது. இன்றைய நிலையில் ஆதனத்தைக் கொள்வனவு செய்து மாதாந்தச் செலவுகளைச் சமாளிப்பது என்பது இலகுவல்ல. இதனால், ஒரே ஆதனத்தில் இரண்டிற்கு மேற்பட்ட சந்ததிகள் சேர்ந்து (3 Generations) வாழ்வது நடைமுறையாக மாறிவருவதனைக் காணலாம்.

இவ்வாறு சேர்ந்து வாழ்வதால் மொத்தமாக ஏற்படும் செலவுகளைச் சமாளிப்பது இலகுவாகும்.

2024ஆம் ஆண்டின் முதல் கால்பகுதியில் ஒரு குடும்பத்தின் வருமானத்தின் 60% ஆதனத்தை நோக்கிய செலவிற்குக் கொடுக்க வேண்டியுள்ளது. பொதுவாக இந்தப் பெறுமதி ஏறக்குறைய 42% அல்லது அதற்குக்குக் குறைவாகவே இருக்க வேண்டும் என்பதே நிதி நிறுவனங்களின் பெறுமதியாகும்.

இன்றைய ஆதன விலையில் தனி குடும்பத்தின் செலவு 42% என்பது நடைமுறையில் இலகுவல்ல. இதனால் முந்தைய சந்ததிகள் (Parents /Grant Parent) சேர்ந்து ஆதனத்தைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

ஒன்றிற்கு மேற்பட்ட குடும்பங்கள் சேர்ந்து வாழ்வது கடந்த 20 வருடங்களில் 45%இனால் அதிகரித்துள்ளது. அதாவது, கனடாவில் 7%ஆன ஆதனங்கள் (986,400) ஒன்றிற்கு மேற்பட்ட சந்ததிகள் சேர்ந்து வாழ்வதாகக் கனடியப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றது.

500,000இற்கு மேற்பட்ட சிறியவர்கள் ஏறக்குறைய 1இற்கு 10இல் வயது 1இலிருந்து வயது 14 வரையிலான பிள்ளைகள் தாத்தா, பாட்டியுடன் (Grand Parents) சேர்ந்து வாழ்வதாகத் தெரிய வந்துள்ளது.

2021ஆம் ஆண்டின் கணக்கின்படி, 1990ஆம் ஆண்டிற்கு பிற்பாடு பிறந்த கனடியர்கள், ஆறிற்கு ஒரு வீடு (1:6) தமது அப்பா / அம்மாவுடன் சேர்ந்தே வாங்கியுள்ளனர்.

எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகம். இதனால், மொத்தச் செலவுகள் இலகுவாகப் பிரித்துக் கொடுப்பனவு செய்யமுடியும். ஒரே வீட்டில் இரண்டாவது மனையை, உருவாக்குவதனை அரசுகள் விரும்புவதுடன், அதற்கு ஊக்குவிக்கும் வழிகளையும் செய்து வருகின்றது.

இரண்டு குடும்பங்கள் சேர்ந்து ஆதனத்தைக் கொள்வனவு செய்யும்போது, எதிர்காலத்தை மனதில்கொண்டு, அதற்கேற்ப ஆதனத்தின் உறுதியில் குறித்துக் கொள்ளவேண்டும். அத்துடன், வாங்கியவர்களில் யாருக்காவது, ஏதாவது விரும்பாத நிகழ்வுகள் நடந்தால் அவ்வாறான சட்ட நெருக்கடியில் இருந்து பாதுகாப்பதற்கேற்ப தகுந்த சட்ட ஆலோசகருடன் கலந்தாலோசித்து, சிறப்பாக உறுதியில் பெயரைக் குறித்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் எதிர்காலத்தில் எவ்வாறு விற்பது போன்றவற்றையும் மனதில் கொள்ளவேண்டும். விரும்பியோ, விரும்பாமலோ இவ்வாறான முறையிலே ஆதனங்களைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலைமை அதிகரிப்பதனைக் காணலாம்.

அத்துடன் ஒரே வீட்டில், சட்டரீதியாக மூன்று வித்தியாசமான குடும்பங்கள் வாழக்கூடிய முறையில் ஆதனங்கள் நிர்மாணிக்கத் தொடங்கியுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, அதே நிலத்தில் Garden Suite என்ற மனையும் நிர்மாணிப்பதற்காக ஒன்ராறியோ அரசு தனது ஆதனக் குறியீட்டில் (Building Code) மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆதன நெருக்கடியை குறைப்பதற்கு அரசுகள் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றன.

### வட்டி வீதம்

கனடிய தொழில் தேடுவோரின் எண்ணிக்கை கடந்த 29 மாதங்களில் அதிகூடியதாக 6.4% அதிகரித்துள்ளது. (Unemployment rate 6.4%)

இந்தமாதம் (ஜூலை 24, 2024)இல் மேலும் வட்டிவீத இறக்கத்தை எதிர்பார்க்கலாம் என பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே நான்கு (4) வருடங்களிற்குப் பிற்பாடு ஜூன் 2024இல் முதல் தடவையாக 0.25% மத்திய வங்கி குறைத்துள்ளது. இதனால் 5%ஆகக் காணப்பட்ட கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 4.75%ஆகக் குறைந்துள்ளது. எனினும், ஆதன வியாபாரத்தில் இந்த வட்டிவீதம் இறக்கம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மேலும் ஒரு வட்டிவீத இறக்கம் ஆதன வியாபாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துமா என எதிர்காலம் சொல்லும்.






# ஆம்ஸ்ட்ராங் படுகொலை – தமிழ்நாடு அரசியல் களம் மாறுமா?

**கண்ணன்**

தமிழ்நாடு பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கடந்த ஜூலை 5ஆம் திகதி மாலை சென்னையில் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை தமிழ்நாட்டின் தலைநகரில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், தமிழ்நாடு அரசியலிலும் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது. ஆம்ஸ்ட்ராங் கொலை, பழிக்குப் பழியாக நிகழ்த்தப்பட்டுள்ளது என்று காவல்துறை தெரிவித்தாலும், இதுபோன்ற தொடர் நிகழ்வுகளால் ஒரு பதற்றத்தை உருவாக்கி தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் ஒரு நீண்ட கால அரசியல் கணக்கு இக்கொலைக்குப் பின்னால் இருக்கிறது என சிலர் குற்றம் சாட்டி வருகின்றனர். உண்மை என்ன?

## ஆம்ஸ்ட்ராங் கொலை - என்ன நடந்தது?

இந்தியாவின் தேசியக் கட்சிகளில் ஒன்றான பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவராக இருந்தவர் ஆம்ஸ்ட்ராங். கடந்த 5ஆம் திகதி சென்னை பெரம்பூர் பகுதியில் தனது பழைய வீடு அருகே நின்று கொண்டிருந்தபோது அங்குவந்த ஒரு கும்பல் ஆம்ஸ்ட்ராங்கைச் சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பினர். ரத்த வெள்ளத்தில் சரிந்த ஆம்ஸ்ட்ராங், மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இதனையடுத்து பொது மக்கள் அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்பட்டுப் பின்னர் பொத்தூர் கிராமத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நேரம்: காலை10.00முதல்-மாலை7.00வரை-Time:10.00am to 7.00pm

இடம்: L`Amoreaux Kidstown Water Park
3159 Birchmount Road,
Picnic Area A (Birchmount & Finch)
Scarborough ON M1V 1S4
பொதுக்கூட்டமும், புது நிர்வாகக்குழுத் தேர்தலும்
பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறும்.
Election of the new Committee Members @ 1:00 pm

பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சிநேகிதர்கள், யாவரும் குடும்பத்துடன் சமூகம் தந்து, 23வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடலில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். காலை, மதிய, உணவும், மாலை சிற்றுண்டியும் வழங்கப்படும். விளையாட்டு போட்டிகளும் இடம் பெறும்.

*RSVP before July 20, 2024 - Please Contact:*
Gunam Hunt 905-472-0379; Mohan Devabalan 416-274-2169
Rajagopal Mathialagan 905-294-5419; Vasuki Devadason 416-266-1234
Reginald Thevaranjan 416-446-2965; Rohan Chelliah 647-855-9438

## ஒன்றாறியோ அரசாங்கத்தில் இளம் ஈழத்தமிழ் தலைமைத்துவத்தின் பிரதிநிதித்துவம்




அண்மையில் நடந்த ஒன்றாறியோ அமைச்சரவை மாற்றத்தில், போக்குவரத் துத்துறை இணை அமைச்சராக இருந்த விஜய் தணிகாசலம் அவர்கள், குடியிருப்பு வசதித்துறை இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அமைச்ச ரவையிலுள்ள இளவயது உறுப்பினர் களில் ஒருவர் என்பதுடன், ஒன்றாறியோ வின் முதல் தமிழ் அமைச்சருமாவார். இது மாநிலத்தின் ஆற்றல்மிக்க இளம் தலைமைத்துவத்துக்கான எடுத்துக் காட்டாகும்.

இவ்வேளையில், ஜுன் 27, 2024 அன்று தலைமைப் பணியாளர்களின் மாற்றங் களின்போது, சரண்யா நீலானந்தசிவம் குடியிருப்புவசதித்துறை இணை அமைச்ச கத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். கனடாவில் பிறந்த திறமைமிக்க இளம் ஈழத்தமிழரான சரண்யாவுக்கு முதல்வர் டக் ஃபோர்ட் (Premier Doug Ford) அவர்களால் நேரடியாக வழங்கப்பட்ட இந்நியமன மானது, அவரின் சாதனைகளையும் இளம் ஈழத்தமிழ்த் தலைமைத்துவத்தின் வளர்ச்சியையும் எடுத்தியம்புகிறது.

சரண்யா உலக வரலாறு மற்றும் சமத்துவம் ஆகிய துறைகளில் பட்டப் படிப்பை முடித்துள்ளதுடன், சமூகத்தில் கல்விச் செயற்பாட்டிலும் கவனம் செலுத்தி வந்துள்ளார். இவர் முன்னர் கனடியத் தமிழ் இளையோர் ஒன்றியத்தின் (CTYA) கலை மற்றும் கலாசார பேரவையின் இயக்குநராகவும் பணியாற்றியிருந்தார்.

தாயகத்திலும் புலம்பெயர்ந்த தேசங் களிலும், ஈழத்தமிழருக்கான அரசியல் பிரதிநிதித்துவம் மிகக்குறைவாகவே உள்ளவிடத்து, இந்நியமனங்களானது துறைசார் சாதனைகளாக மட்டுமல்ல, அவை தமிழரின் முன்னேற்றத்தினதும் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மான குறியீடாகவும் பார்க்கப்படுகிறது. "ஒரு சமூகமாக, இளையவர்கள் தலைமையேற்று எமது குரல்கள் ஒலிக்கவும், வளமான எதிர்காலத்தை உருவாக்கவும் தமிழராய் நாம் தொடர்ந்தும் இணைந்து செயற்பட வேண்டும்" என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

# கனடா பீல் பிரதேச சொப்கா மன்றத்தின் 15வது ஆண்டுவிழா



குரு அரவிந்தன்

ஜூலை 06, 2024ஆம் திகதி கனடாவின் பீல் பிரதேசத்தில் உள்ள சொப்கா குடும்ப மன்றத்தினர் தமது 15ஆவது ஆண்டு விழாவை மிசிசாகாவில் ஸ்ரிவ்பாங் வீதி யில் உள்ள அனாபில்ஸ் மண்டபத்தில் சிறப்பாக நடத்தினர். மங்கல விளக்கேற்றி, அகவணக்கமும் அதைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து, கனடாப்பண் ஆகியன இடம்பெற்றன. தொடர்ந்து வரவேற்புரையும் அதன்பின் மன்றத் தலைவர் யாழினி விஜயகுமாரின் உரையும் இடம்பெற்றன. இந்த விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் அவர் தனது உரையில் நன்றியைத் தெரிவித்திருந்தார்.



இந்த விழாவின் பிரமத விருந்தினராகக் கனடாக் காவல்துறைப் பெண் அதிகாரியான ஏவா ரட்ணகுமார் கலந்து கொண்டார். இளைய தலைமுறையினருக்கு ஏற்றவகையில் ஒழுக்கம், கட்டுப்பாடு சார்ந்து அறிவூட்டும் வகையில் அவரது உரை இடம் பெற்றிருந்தது. அடுத்து ஈசாபரா ஈசானந்தாவின் உரை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ரொறொன்ரோ கல்விச் சபையைச் சேர்ந்த அனு சிறீஸ்கந்தராஜாவின் உரை இடம்பெற்றது. அவரது உரை இளைய தலைமுறையினரின் கல்வி சார்ந்ததாக அமைந்திருந்தது.




எனது 25 வருடகால ரொறொன்ரோ கல்விச்சபை ஆசிரியர் பணியைப் பாராட்டி, ‘ரொறொன்ரோ கல்விச்சபை’ பாராட்டுப் பத்திரம் வழங்கியபோது அவர்தான் அப்போது அதை மேடையில் வைத்து வழங்கி என்னைக் கௌரவித்திருந்தார். இவரது கணவர் பார்த்தி கந்தவேளும் ரொறொன்ரோ நகரசபை 20ஆம் வட்டாரப் பிரதிநிதியாக இருக்கின்றார். இருவருமே தமிழ்மொழி வளர்ச்சியில் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

இம்மன்றத்தின் முன்நாள் தலைவராகவும், தற்போது காப்பாளராகவும் நான் இருப்பதால் இளைய தலைமுறையினருக்கு உரையாற்றும்படி கேட்டிருந்தனர்.

எனது உரையில், “சொப்கா மன்றத்தின் இந்த ஆண்டு விழாவை இளையதலைமுறையினர் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்துவதையிட்டுப் பெருமையாக இருக்கின்றது. 15 வருடங்களுக்கு முன் சிறுவர் சிறுமிகளாக இருந்தவர்கள் இன்று நிர்வாகக்குழுவில் அங்கம் வகித்து




தமிழ் மொழியில் நிகழ்ச்சிகளை நடத்துவது பெருமைக்குரியது. புலம்பெயர்ந்த கனடிய மண்ணில் தமிழ்மொழி நிலைத்து நிற்காது என்று சொன்னவர்கள் இந்த நிகழ்வைக் கட்டாயம் பார்க்க வேண்டும். இங்கே பிறந்து வளர்ந்த மன்றத்தின் இளைய தலைமுறையினர் தமிழில் உரையாடி இந்த நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்துவதையிட்டு எல்லோருக்கும் பெருமையாக இருக்கின்றது. இளைய தலைமுறையினரிடம் எங்கள் மொழியைக் கொண்டு சேர்ப்பதில் நாங்கள் எடுத்த முயற்சி வீண்போகவில்லை என்பதை நேரடியாக இங்கே பார்க்கும்போது எமக்குப் பெருமையாக இருக்கின்றது.” என்று உரையின்போது குறிப்பிட்டிருந்தேன்.

தொடர்ந்து வீணை இசை, திரைப்படப் பாடல், சிறுவர் நாடகம், சிறுமிகள் நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அதைத்தொடர்ந்து நன்றிஉரை இடம் பெற்றது. சென்ற வருடம் நடந்த சொப்கா விழாவில் எனது நூல்களை விற்பனை செய்து அதில் கிடைத்த பணத்தை மருத்துவமனைக்கு அன்பளிப்பாகக்



கொடுத்திருந்தோம். அதேபோல நடைபயணம் மேற்கொண்டு அதில் சேகரித்த பணத்தை மருத்துவமனையில் நோயாளர் தங்கும் ஓர் அறையைப் பராமரிப்தற்கான செலவையும் கொடுத்திருந்தோம். இரத்த தானம், உணவு வங்கிக்கு உணவு சேகரித்துக் கொடுத்தல், பூங்கா துப்புரவு செய்தல், முதியோர்களுக்கான பயிற்சிப் பட்டறை, தமிழ்மொழி வகுப்புகள் போன்றவற்றையும் சொப்கா மன்றத்தினர் செய்து வருகின்றனர்.

---

# அர்ச்சுனா.....

04ஆம் பக்கத்தொடர்ச்சி

வசதிகளைப் பயன்படுத்தாமல் தட்டிக் கழிக்கின்ற போக்கு அதிகரித்திருக்கிறது.

இது, தனியார் வைத்தியசாலைகளை நோக்கி நோயாளிகளை இழுத்துச் செல்லுகின்ற மருத்துவர்களின் தந்திரம் என்ற குற்றச்சாட்டு பரவலாக இருக்கிறது. யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையைச் சுற்றி ஏராளமான தனியார் வைத்தியசாலைகள் முளைத்திருக்கின்றன. சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகாமையில் பல தனியார் வைத்தியசாலைகள் உருவாகி இருக்கின்றன.

இப்படி சகல வசதிகளையும் கொண்ட அரசாங்க வைத்தியசாலைகளைச் சுற்றி, தனியார் வைத்தியசாலைகள், ஆய்வு கூடங்கள் பல உருவாகின்றன என்றால், அதன் அர்த்தம் என்ன?

அரசாங்க வைத்தியசாலைகள் சரியாக இயங்கவில்லை, போதிய சிகிச்சைகளை நோயாளிகளுக்கு வழங்கவில்லை என்பது தானே உண்மை.



இந்தநிலையில் இருந்து, வடக்கின் சுகாதாரத் துறையை மீட்டெடுப்பது முக்கியம். அதனால்தான், மருத்துவர் அர்ச்சுனா பற்றவைத்த தீ, இப்போது பரவலாகப் பற்றி எரிகிறது.

ஆனால், துரதிர்ஷ்டமாக, இந்தத் தீ, மருத்துவர் அர்ச்சுனாவையும், சூழ்ந்து கொண்டுவிட்டது. அவர் பிரச்சினை தீவிரமடைந்ததும் கொழும்புக்கு அழைக்கப் பட்டார். சாவகச்சேரி வைத்தியசாலையில் அவர் வகித்த பதவிக்கு, பல தனியார் வைத்தியசாலைகளுக்குச் சொந்தமான ஒரு மருத்துவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இது பிரச்சினைகளுக்கு அளிக்கப்பட்ட தீர்வு அல்ல.

அதேவேளை, மருத்துவர் அர்ச்சுனா விவகாரத்தில் ஒரு விடயம் சிக்கலானது. அவருக்கு மத்திய சுகாதார அமைச்சினாலேயே நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. திரும்ப அழைத்துக் கொண்டதும், மத்திய சுகாதார அமைச்சுத்தான்.

ஆனால் சாவகச்சேரி தள வைத்திய சாலை, மாகாண சுகாதார அமைச்சுக்கு உட்பட்டது. இந்த நிலையில், எவ்வாறு மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் இந்த விவகாரத்தில் தலையிட்டார்? என்ற கேள்வி இன்னொரு பக்கம் இருக்கிறது.

இது மாகாண அரசாங்கத்தின் அதிகாரத்தை மத்திய அரசாங்கம் பிடுங்கிக் கொள்கிறது என்ற குற்றச்சாட்டுக்கும் வழிகோலியிருக்கிறது.

ஒரு பக்கத்தில் சுகாதாரப் பிரச்சினை, இன்னொரு பக்கத்தில் அதிகாரப் பிரச்சினை என, சாவகச்சேரி விவகாரம் இப்போது பரவலான பேசுபொருள் ஆகியிருக்கிறது.

இவை இரண்டுமே பேசுபொருளாக மாத்திரம் இருப்பது முக்கியமல்ல. அதனைத் தாண்டி, அவசியம் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள்.






# கல்கி 2898AD – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

மகாபாரதத்தில் துரோணாச்சாரியரின் மகன் அசுவத்தாமன், குருச்சேத்திரப் போரில் அவரது செயலால் கிருஷ்ணரிடம் சாபம் ஒன்றைப் பெறுகிறார். இச்சாபத்தால் அசுவத்தாமன் போரில் அடைந்த காயங்கள் மாறாமல், இறக்கவும் முடியாமல், கலியுகம் முடிவடையும்வரை வாழ வேண்டும் என மகாபாரதம் கூறுகிறது.

இச்சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு எடுக்கப்பட்ட விஞ்ஞானப் புனைகதைப் படம்தான் (Science Fiction) கல்கி 2898AD. இந்தியாவின் அதிகமான செலவில் தயாரிக்கப்பட்ட இத்தெலுங்கு மொழிப்படம், அமிதாப் பச்சன், பிரபாஸ், தீபிகா படுகோன், கமல்ஹாசன், கீர்த்தி சுரேஷ் உட்பட பல பிரபல நடிகர்களின் நடிப்பில் தமிழ், இந்தி உட்பட பல மொழிகளில், ஜூன் 2024இல் வெளியானது.

இப்படத்தில், 2898ஆம் ஆண்டில் பூமி, யாஸ்கின் (கமல்ஹாசன்) என்பவரால் ஆளப்பட்டு வருகிறது. அவர் பூமியின் வளத்தை எடுத்து, பெரும் விண்கலன் ஒன்றை உருவாக்கியதால், உலகம் அழிந்த நிலையில் உள்ளது. செல்வந்தர் அனைவரும் யாஸ்கினின் விண்கலத்தில் வாழ்ந்துவருகின்றனர். பூமியில் பட்டினி, வறட்சி போன்ற கஷ்டங்கள் பரவி சமயம், ஒற்றுமை, இயற்கை போன்ற நன்மைகள் அனைத்தும் அழிந்துவிட்டன. இதற்கு மேலாக, யாஸ்கின் பெண்களின் கருவிலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்து ஒன்றினால் தனது வாழ்வை 200 ஆண்டுகளாக நீட்டியுள்ளார்.

இந்நிலையில் உலகில் வாழும் சில போராளிகள் கடவுளின் அடுத்த அவதாரத்தின் பிறப்பிற்காகக் காத்திருக்கின்றனர். எல்லா மதத்தவர்களும் இப்போராளி குழுவில் சேர்ந்து தமது கடவுளின் வருகைக்குக் காத்திருக்கின்றனர். இதில் இந்துக்கள் அவரை விஷ்ணுவின் கல்கி



அவதாரமாகக் கருதுகின்றனர். போராளிகள் கல்கியின் தாயை அடையாளம் கண்டு காப்பாற்றுவார்களா? இல்லாவிட்டால் அவர்கள் யாஸ்கனிடம் சிக்குவார்களா? என்ற கேள்விக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

விஞ்ஞானப் புனைகதைகளில் எதிர்கால உலகம், தொழில்நுட்பம் போன்றவை காட்டப்படும். இப்படத்தில் இவைவரும் காட்சிகள் மிகச்சிறப்பாக, பெரிய ஆங்கிலப் படங்களுடன் ஒப்பிடக்கூடிய விதத்தில் அமைந்துள்ளன. கடந்த சில ஆண்டுகளாகப் பிரபல ஆங்கிலப் படங்களுக்கு கணினிக் காட்சித் தயாரிப்பு இந்தியாவில் செய்யப்பட்டு வருகிறது. அதே தரமுள்ள காட்சிகளை தற்போது இந்தியப் படம் ஒன்றில் காண்பது சிறப்பாகும்.

ஆங்கில விஞ்ஞானப் புனைகதைப் படங்களைப் பார்ப்போருக்கு, அவற்றில் பல கலாசாரங்களின் பங்கு உள்ளன என்றும், இந்திய கலாசாரங்களை வைத்து சிறப்பான விஞ்ஞானப் புனைகதை படத்தை எடுக்கலாம் எனவும் உணரலாம். இப்பட இயக்குநர் இதனை உணர்ந்து, மகாபாரதம், காசி, உடை, மொழி என இந்தியாவை அடிப்படையாகக் கொண்ட ஆங்கில விஞ்ஞானப் புனைகதை அமைப்பில் இப்படத்தை எடுத்துள்ளார்.

அடிப்படைக் கதை பழமையானதாக இருந்தாலும், புதிய அமைப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், கதை மெதுவாகச் செல்கிறது. இப்படம் முடியும் இடம் பொதுவாக ஒரு கதையின் இடைவேளையில் காணப்படும் இடமாக இருக்கிறது. இக்கதையை வைத்துப் பல படங்களை எடுக்கும் நோக்கம் இதில் தெரிகிறது. பல பிரபல நடிகர்கள் சிறு கதாபாத்திரங்களில் தோன்றுகின்றனர். சில முக்கிய கதாபாத்திரங்கள் இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இதனால் படம் நீளமாகிறது. படத்தின் முடிவு ஏற்கக்கூடிய இடத்திலிருந்திருந்தால் இப்படம் விறுவிறுப்பாக இருந்திருக்கும்.

அத்தோடு கதாபாத்திரங்கள், நேரம் மற்றும் கதைப் போக்கினால் அவர்களின் உணர்ச்சி மற்றும் திறமையைக் காட்ட சந்தர்ப்பம் அமையவில்லை. திறமையான நடிகர்கள் பலர் கதையைச் செலுத்தும் வெறும் நபர்களாக இருக்கின்றனர். தீபிகா உட்பட பல பெண்கள் முக்கிய கதாபாத்திரங்களில் இருப்பது சிறப்பாக இருந்தாலும், அவர்களும் குறைந்த சுயமுயற்சியும் உணர்வுடனும் நடிப்பது போல் இருக்கின்றனர். எனவே, வருங்கால 'கல்கி' தொடர் படங்களில் ஆழமான கதாபாத்திர அமைப்பு இருந்தால் நன்றாக



இருக்கும்.

விஞ்ஞானப் புனைகதைகளை விரும்புவோரும், மகாபாரதத்தைச் சார்ந்த படத்தைப் பார்க்க விரும்புவோரும், பெரிய செலவுடன் பிரம்மாண்டமாக எடுத்த படங்களைப் பார்க்க விரும்புவோரும் இப்படத்தைப் பார்க்கலாம்.

---

## மனிதநேயன்.....

11 ஆம் பக்கத்தொடர்ச்சி

மண்டேலா மெடிஸ்த திருச்சபை ஆலயத்தால் ஞானஸ்ஞானம் பெற்றார். அதன்வழி அவரது பெயர் நெல்சன் என்பதாக மாற்றம் கண்டது. அதனால் அவர் தென்னாபிரிக்காவின் பிரித்தானியக் கல்வி முறையைப் பெற்றுக்கொள்ளும் நிலையை ஏற்படுத்தியது. அவரது குடும்பத்தில் முதலாவதாகப் பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றவராவார். அவர் மாகாணத் தலைநகரான தெப்புலான்ட் என்னும் இடத்திற்கு மோட்டார் வாகனத்தில் அழைத்து வரப்பட்டார். அப்போது மீண்டும் தனது இளமைக் காலத்துக் கிராமமான கியுநுவிற்கு மீண்டும் வருவேனோ என்னும் ஐயம் ஏற்பட்டது. மிக விரைவாகவே அவர் புதிய இடத்தில் தன்னைத் தயார்படுத்திக்கொண்டார்.

நெல்சன் மண்டேலாவும் ஏனைய 25 இளைஞர்களும் அவர்களின் 16ஆவது வயதுப் பூர்த்தியில் மேற்கொள்ளப்படும் பூப்பு விழாவில் கலந்துகொண்டு குல வழக்கப்படி மனிதர்கள் என்னும் தகைமைக்கு உயர்த்தப்பட்டனர். இது தந்தைவழிச் சொத்தின் வாரிசுரிமையையும், தேச வழக்கத்தையும் கைக்கொள்வதாக அமைந்திருந்தது.

1939இல் அவர் போட் கரேயில் உள்ள பல்கலைக்கழகக் கல்லூரியில் சேர்ந்து கற்றார். இது கறுப்பின மக்களின்



தங்கியிருந்து கற்பதற்கான உயர்கல்வி நிலையமாகக் காணப்பட்டது. அவரது கடின உழைப்பால் கல்வியில் வெற்றி பெற்றார். இந்தக் கல்லூரி ஒக்ஸ்போர்ட் அல்லது ஹவாட் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பானதாகக் கணிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில் கற்கும்போது ரோமன் டச்சுச் சட்டம்பற்றி கற்பதில் ஆர்வம் காட்டியதோடு தென்னாபிரிக்க வரலாற்றையும் கற்றுவந்தார். ஒரு கறுப்பு இனத்தவர் பொதுச்சேவை அல்லது ஒரு எழுதுவினைஞர் பதவியைத்தான் பெற்றுக்கொள்ள முடியும் என்னும் நிலை ஆங்கில நிர்வாகக் கட்டுப்பாடாக இருந்தமையால் அதற்கான கற்கைநெறியைத்தான் மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் திணிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தில் அனைத்து மாணவர்களின் நட்புறவைப் பெற்றுக்கொண்ட கிராமத்துப் பையனான மண்டேலா மாணவர் பிரதிநிதித்துவ சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். மாணவர் பிரதிநிதித்துவசபைக்குப் போதிய அதிகாரமின்மையாலும் நல்ல உணவு வழங்கப்படாமையாலும் பெரும்பான்மையான மாணவர்கள் தேர்தலைப் பகிஸ்கரித்தனர். இதனால் மண்டேலா பல்கலைக்கழகத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டதோடு அவர் மாணவர் சபையில் பணியாற்றுவதானால் மட்டுமே தொடரலாம் என்ற காலக்கெடுவையும் விதித்தது. அவர் வீட்டிற்குத் திரும்பியபோது அவரது வளர்ப்புத்தந்தை பல்கலைக்கழகத்திற்குத் திரும்பவேண்டும் எனப் பணித்தமையால் அவர் மீண்டும் சென்றார்.

வீடு திரும்பிய மண்டேலாவிற்குத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டதை அவர் விரும்பாதமையால் வீட்டை விட்டு ஜொகன்ஸ்பேக் நகருக்கு ஓடினார். அங்கு பல்வேறுபட்ட வேலைகளைச் செய்தார். வேலையைச் செய்துகொண்டே படித்துப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். அதன்பின்னர் சட்டப் படிப்பை விற்வாட்டர்ஸ்ராண்ட் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார்.

சட்டப்படிப்பை மேற்கொள்ளும் வேளை இன ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிரான இயக்கத்தில் இணைந்தார். அதன்பின்னர் 1942இல் ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் இணைந்தார். இளைஞர் இயக்கத்தின் ஒத்துழையாமை, மறியல், பொதுச்சட்டத்திற்குப் பணியாமை போன்ற செயல்களில் ஈடுபடத்தொடங்கினார். பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 20ஆண்டுகளாக அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்தார். மண்டேலா தம்போவுடன் இணைந்து சட்ட நிறுவனம் ஒன்றை உருவாக்கி பாதிப்பிற்கு உள்ளாகும் கறுப்பினத்தவர்களுக்கு இலவச அல்லது குறைந்த கட்டணத்தில் சட்ட உதவிகளைச் செய்து வந்தார்.

1956இல் மண்டேலாவும் ஏனைய 150 உறுப்பினர்களும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பான் ஆபிரிக்க காங்கிரஸிலிருந்து ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் பிரிந்துசென்று தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபடத்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# விமானப் பிரயாணங்களின்போது பொதிகள் தொலைந்தால் தீர்வு என்ன?




விமானப் பிரயாணத்தின்போது கனடாவுக்கு வரும் பிரயாணி ஒருவரின் பொதிகள் தொலைந்தால்? அடுத்த கட்டம் என்ன? என்ற விடயத்துக்கு இன்று வருவோம்.

விமானப் பிரயாணங்களில் பிரயாணி ஒருவர் விமான நிலையத்திற்கு வந்து சேர அவரது பொதிகளும் குறிப்பிட்டபடி வந்து சேர்ந்து, அவரது கையில் சேர்க்கப்பட வேண்டியது விமான சேவை நிறுவனங் களின் சட்டரீதியான பொறுப்பாகும்.

இவை தொடர்பாகக் கனடிய மத்திய அரசு 'Passenger bill of rights Sec -23 of the Air passenger protection regulations' என்றதொரு சட்டமூலம் ஒன்றினை உருவாக்கி 'கனடிய விமானப் போக்குவரத்து அதிகாரசபை' (The Canadian Air Transport Security Authority) என்ற மத்திய அரச நிறுவனம், இச்சட்ட மூலத்தினைக் கண்காணித்து நடைமுறைப்படுத்துகின்றது.

"பொதி ஒன்று தொலைந்துவிட்டது. கண்டு பிடிக்கமுடியவில்லை" என விமான சேவைக் கம்பனி ஒன்று பிரகடனப்படுத் தினால் அடுத்த கட்டமாக என்ன செய்யவேண்டும்? என்பதனை இச் சட்டப் பிரிவுகள் தெளிவுபடுத்துகின்றது.

எழுத்துமூலம் பொதிகளின் இழப்புகளுக்கு நட்டஈடு கோரி, எந்த நிறுவனத்தின் விமான சேவையில் முதல் பொதி ஏற்றப்பட்டதோ அந்த விமான சேவைக் கம்பனிக்கும், இறுதியாக எந்த விமான சேவையில் பொதிவந்து சேர்ந்திருக்க வேண்டுமோ அந்தக் கம்பனிக்கும் நட்ட ஈடு கோரி மனுச் செய்யலாம். அதற்குரிய விண்ணப்பப் படிவங்களினை இணையதளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.



உள்ளூர் விமானப் பிரயாணமாக இருந்தால் $3,500 டொலர் வரையும், சர்வதேச விமானப் பிரயாணமாக இருந்தால் $2,100 டொலர் வரையும் நட்டஈடு வழங்கவேண்டும் என்பது விமானப் பாதுகாப்புச் சட்டங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் ஒவ்வொரு விமான சேவைக் கம்பனியும் இந்த விடயத்தில் பிரத்தியேக மான சட்டங்களை உருவாக்கி நடை முறைப்படுத்தி வருகின்றது.

விமான சேவை நிறுவனம் ஒன்று பொதிகள் தொலைந்து, தொடர்ந்து நட்டஈடு வழங்கும் விடயத்தில் காலதாமதம் செய்தால் 'கனடிய விமானப் போக்குவரத்து அதிகாரசபை' (The Canadian Air Transport Security Authority) அல்லது 'விமானப் பிரயாணங்களின் முறைப்பாட்டு அலுவலகம்' (Air Travel Complaint Directorate) என்ற நிறுவனங்களின் கவனத்துக்கு முறைப்பாட்டினை முன்னெடுத்தால் எதுவித செலவுகளும் இல்லாது அதனைத் தீர்த்து வைப்பர். இதற்குரிய தகவல்கள், விண்ணப்பப் படிவங்களை இணையதளங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இவை தவிர

- பிரயாணங்கள் காப்புறுதித் திட்டங்கள் (Travel Insurance)
- மற்றும் வீட்டுக் காப்புறுதிகள் (Home Insurance) என இருந்தால் அதன் மூலமும் பொதி இழப்புக்களுக்கு நிவாரணம் பெறலாம்.

அடையாளம் கண்டு பெற்றுக்கொள்ளாது தவறவிடும் பொதிகளில் தெளிவான முகவரி எழுதி ஒட்டியிருந்தால் அவை கண்டுபிடிக்கப்படும்போது ஐந்து நாட் களுக்குள் சரியான முகவரிக்கு அனுப்பி வைப்பர். ஐந்து நாட்களின் பின்பும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது போனால் தத்தமது விமான நிறுவனத்தின் பண்டகசாலைக்கு (Unclaimed baggage Warehouse) அனுப்பி விடுவர்.

அதனைத் திறந்து பார்த்து உரிமையாளரின் அடையாளங்கள் ஏதாவது உண்டா? எனப் பரிசீலனை செய்யும் அதிகாரம் அப் பண்டகசாலையின் உயர் அதிகாரிகளுக்கு உண்டு. அவ்வாறு சரியான முகவரி கிடைத்தால் அதனை உரியவரிடம் ஒப்படைப்பர். அவ்வாறு அடையாளம் காணமுடியவில்லையானால் 60 நாட்களின் பின்பு அதனுள் உள்ள பொருட்களினை எடுத்து விற்பனை செய்ய அல்லது நன்கொடையாக வழங்க அல்லது குப்பைத் தொட்டியில் வீசும் அதிகாரங்கள் யாவும் பண்டகசாலையின் அதிகாரிகளுக்கு உண்டு.

ஆனால் கோரப்படாது, உரிமையாளரின் அடையாளமும் கண்டுபிடிக்கப்படாது பண்டகசாலைகளில் குவியும் பொதிகளும் உண்டு. தொலைந்த பொதிகளுக்காக நட்டஈடு கோருவோரும் பலர் தொடர்ந்த வண்ணமே உள்ளனர்.

எனவே விமானப் பயணிகள் என்ன செய்ய வேண்டும்?

பொதிகளின் வெளியே மிகத் தெளிவாகத் தங்களின் பெயர், முகவரியை எழுதி அவை கழன்று விடாத நிலையில் உறுதி யாக ஒட்டிவிடல் வேண்டும். பொதிகளின் உள்ளேயும் தங்களின் பெயர் முகவரிக் குரிய அடையாளங்கள் ஏதாவது ஒன்றின் பிரதியினை வைத்துவிடல் வேண்டும்.

அப்படிச் செய்துவிட்டால் பல விடயங்கள் இலகுவாக இருக்கும்.

---

# மனிதநேயன்.....

18 ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடங்கினர். 1961இல் தனது அமைதி வழிப் போராட்டம் பயனளிக்காது என்பதனை உணர்ந்து கொண்டார். கொறிலா போர்ப்பயிற்சி இளைஞர் களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதனை உணர்ந்து அதற்கு உதவுவதென முடிவு செய்யப்பட்டது. 1961இல் மூன்று நாட்கள் தேசிய அளவிலான தொழிலாளர் மறியல் போராட்டத்தை மேற்கொண்டார். அதனால் அவர் கைது செய்யப்பட்டு ஐந்து ஆண்டு களுக்கு சிறையில் அடைக்கப்பட்டார். மீண்டும் 1963இல் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட அவருக்கும் ஏனைய 10 பேருக்கும் ஆயுட்காலத் தண்டனை விதிக்கப்பட்டது. 1963இல் தென்னாபிரிக்கத் தலைவராக இருந்த பி.டபிள்யு போத்தா, மண்டேலாவை விடுதலை செய்வதற்கு ஆயுதப் போராட்டம் நிறுத்தப்படவேண்டும் என்னும் நிபந்தனையை முன்வைத்தார். மண்டேலா இணக்கம் தெரிவிக்காததால் கைவிடப் பட்டது. உலக நாடுகளும், தென்னாபிரிக்க மக்களும் மண்டேலாவின் விடுதலைக் காகப் பல முயற்சிகளை மேற்கொண்ட மையால் இறுதியாக 1990இல் அப்போதைய அரசுத்தலைவர் எப்.டபிள்யு. டி. கிளார்க் அவரை விடுதலை செய்தார். அவரது விடுதலை உலக நாடுகளால் வரவேற்கப்பட்டதோடு தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கைக்கும் முற்றுப் புள்ளி வைத்தது. தடைசெய்யப்பட்ட தென்னாபிரிக்கத் தேசிய காங்கிரசின் தடை நீக்கப்பட்டதோடு அரசியல் கட்சி யாகவும் மாற்றம் பெற்றது. அதனைத் தொடர்ந்து மண்டேலா நாட்டின் தலை வராக 1994இல் பதவியேற்றார். 25 ஆண்டுகள் சிறையில் கழித்த ஒரு கறுப்பினத்தவர் முதன்முதலாகக் கறுப்பினத் தலைவராகப் பதவியேற்றமை வரலாற்றுப் பதிவாகும். அவரோடு பணி யாற்றிய தம்போ தேசியக் காங்கிரசின் தலைவரானார். ஆபிரிக்க மக்களின் விடுதலைக்காக அவர் மேற்கொண்ட செயல்பற்றி அவரே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"During my lifetime I have dedicated myself to this struggle of the African people. I have fought against white domination, and I have fought against black domination. I have cherished the ideal of a democratic and free society in which all persons live together in harmony and with equal opportunities. It is an ideal which I hope to live for and to achieve. But if needs be, it is an ideal for which I am prepared to die."



என்னும் அவரது கூற்று அவரை ஒரு உலகின் உன்னத தலைவராகப் பாராட்டப் படுவதற்குக் காரணமாக அமைந்தது. அவரது அயராத பணி அவரை உலகத் தலைவர்களின் பாராட்டுக்களைப் பெற்றுக் கொள்ள வைத்தது. பிரித்தானிய மகாராணி அவர்கள் "Worked tirelessly for the good of his country" எனக் குறிப்பிட்டுள்ளமை அவரது அயராத முயற்சியின் வெளிப்பாடே. அவரது அசாதாரண துணிச்சலும் அமைதிக்கான போராட்டமும் அவருக்கு 1994இல் நோபல் சமாதானப் பரிசினைப் பெற்றுத்தந்தது. "உலகிற்கு ஒளிதந்த ஒரு தீபம் அணைந்துவிட்டது" என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் குறிப்பிட்டமை கருத்திற்கொள்ளற்பாலது. "நாம் வாழும் காலத்து தலைசிறந்த ஒரு கதாநாயகன்" என அமெரிக்கத் தலைவர் ஒபாமா குறிப்பிட்டுள்ளமையும் அவரது பெருமையை எடுத்துக்காட்டுகின்றன.

அவர் படிக்கும் காலத்திலேயே நறுமணம் கமழும் கறுப்பு மலர் எனச் செல்லப் பெயரால் அழைக்கப்பட்டவர். மக்களுக் காகப் பணியாற்றிய ஒரு மகத்தான தலைவரை உலகத் தலைவர்கள் அனை வரும் பாகுபாடு ஏதும் காட்டாது சென்று அஞ்சலி செலுத்தியதோடு அவரது பணியினைப் பாராட்டியமை அவரின் தன்னலமற்ற பக்கம் சாராத நடுநிலை மைப் போக்கைப் பறைசாற்றுகின்றது. உன்னத தலைவனை இன்று உலகம் இழந்துவிட்டது. மகாத்மா காந்தியின் அமைதிவழிப்போராட்டத்தில் 20ஆண்டுகள் ஈடுபட்டுப் பயனடையாதமையால் சுபாஸ் சந்திரபோசின் வழியில் தென்னாபிரிக் காவை விடுவிக்கப் போராடிய துணிவு மிக்க தலைவனாகப் பாராட்டப்படுகின்றார்.




# ஆம்ஸ்ட்ராங் .....

09ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆம்ஸ்ட்ராங் கொலையைத் தொடர்ந்து எதிர்க் கட்சிகளும், கூட்டணிக் கட்சிகளும் திமுக ஆட்சியின் மீதும், காவல்துறையின் நடவடிக்கை தொடர்பாகவும் விமர்சனத்தை முன்வைக்கத் தொடங்கின. இதில், திமுகவின் கூட்டணிக் கட்சியான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், கடுமையான நிலையெடுத்துப் பேசத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது. கொலையில் ஈடுபட்ட குற்றவாளிகளைச் சில மணி நேரங்களில் கைது செய்துவிட்டோம் என்று காவல்துறை தெரிவித்தபோது, கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி அதனை உடனடியாக மறுத்து, “கைது செய்யப்பட்டவர்கள் உண்மையான குற்றவாளிகள் இல்லை” என்று ஊடகங்களிடம் தெரிவித்தார். தொடர்ந்து, ஆம்ஸ்ட்ராங் இறுதி நிகழ்வில், பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் மாயாவதியுடன் பங்கேற்றுப் பேசிய திருமாவளவன், “இந்த வழக்கில் உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்பதுதான் பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் ஆம்ஸ்ட்ராங் குடும்பத்தினர் முன்வைக்கும் கோரிக்கை. அதனாலேயே மாயாவதி இந்த வழக்கினை சிபிஐ (ஒன்றிய அரசின் புலனாய்வு பிரிவு) விசாரிக்க வேண்டும் என்று கோருவதற்கான கட்டாயம் எழுந்துள்ளது. எனவே, காவல்துறை இவ்வழக்கில் உண்மையான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிய வேண்டும். இதற்குப் பின்னால் உள்ள கூலிப்படையினர் யார்? அவர்களின் பின்னணி என்ன என்பதைக் கண்டறிய வேண்டும்.

இதுபோன்ற கொலைகள் தொடர்ந்து நடப்பது அதிர்ச்சி அளிக்கிறது. குறிப்பாக தலித் தலைவர்கள், சிறிய அளவில் இருந்தாலும், பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றனர் என்பதை இது உணர்த்துகிறது” என்று பேசினார்.

சிபிஐ போன்ற ஒன்றிய அரசின் விசாரணை முகமைகள் அரசியல் நோக்கத்துடன் பயன்படுத்தப்படுவதாக, காங்கிரஸ் மற்றும் திமுக அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணிக் கட்சிகள் பாஜகவை தொடர்ந்து விமர்சித்து வருகின்றன. இந்நிலையில், இந்தியா கூட்டணியில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி பாஜகவிற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் சிபிஜ விசாரணை கேட்கும் கோரிக்கைக்கு ஆதரவு கொடுத்துள்ளது. ஏற்கனவே கள்ளக்குறிச்சி விஷச் சாராய வழக்கில் அதிமுகவும், பாஜகவும் சிபிஜ விசாரணை கேட்டு போராடுகின்றன. இப்போது அந்த வரிசையில் விசிகவும் இணைந்துள்ளது.

கள்ளக்குறிச்சியில் விஷச் சாராய மரணங்கள் தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஒருங்கிணைத்த ஆர்ப்பாட்டத்திலும் திருமாவளவன் திமுகவை நோக்கி விமர்சனத்தை முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.



மேலும், “தமிழ்நாட்டில் கள்ளச்சாராயத்தை தடுப்பதாகக் கூறியே 2003ஆம் ஆண்டு அதிமுக காலத்தில் டாஸ்மாக் திறக்கப்பட்டது. அப்போது 3 ஆயிரம் கோடிக்கு விற்பனையானது. தற்போது, 45ஆயிரம் கோடிக்கு விற்பனையாகிறது” என்று திமுக ஆட்சியில் மது விற்பனை அதிகரித்திருப்பதைக் குறிப்பிட்டு விமர்சனம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து, திமுக கூட்டணியில் இருந்து விசிக விலகுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. உத்தரப் பிரதேசத்தில் செய்ததுபோல தமிழ்நாட்டில் தலித்துகளை தங்கள் பக்கம் ஈர்க்க பாஜக முயன்று வருகிறது. அதற்கு விசிகவினர் இணங்கி, அதிமுக, பாஜக என எல்லோரும் இணைந்து ஓர் அணி அமைத்தால் திமுகவுக்கு அது சவாலாக இருக்கும்.

ஆனால், இத்தகைய சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் விதமாக, ஜூலை 12 அன்று, தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் விசிக தலைவர் திருமாவளவன், தமிழ்நாடு முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலினை சந்தித்துப் பேசினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமாவளவன், “பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலையில் கைது செய்யப்பட்டவர்கள் மட்டுமின்றி, இதனைத் திட்டமிட்ட கூலிக் கும்பல் ஆகிய அனைவரையும் கைது செய்ய வேண்டும் என்று முதல்வரிடம் வலியுறுத்தியிருக்கிறோம்.


## கனடா வாழ் துன்னாலை – கரவை மக்கள் மன்றம்

### 27ஆவது ஆண்டு கோடை கால

### ஒன்று கூடல் 2024

இடம்: Milliken Park Area C (Middlefield & Steeles)
5555 Steeles Ave. E. Scarborough, Ontario M9L 1S7

காலம்: ஜூலை 20, 2024 சனிக்கிழமை

நேரம்: காலை 9:00 மணி தொடக்கம் மாலை 8:30 மணிவரை நடைபெற உள்ளது.

தொடர்புகளுக்கு: வேல் விவேகானந்தன் - 416.418.0477
மு.கருணைநாதன் - 647.703.4674


தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து ஒரு பதட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சில அரசியல் கட்சிகள் சில அமைப்புகளுடன் இணைந்து திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றனர். குறிப்பாக பாஜகவுக்கு இந்த செயல்திட்டம் இருப்பதை அறியமுடிகிறது. ஆகவே, ஆம்ஸ்ட்ராங் கொலையிலும்கூட ஓர் அரசியல் செயல்திட்டம் இருக்க வாய்ப்பு இருப்பதாக விசிக சந்தேகப்படுகிறது.

ஆம்ஸ்ட்ராங் உயிரிழந்த சில நிமிடங்களில் பாஜக கட்சியைச் சார்ந்த ஒருவர் தான் ஊடகங்களுக்குப் பேட்டி அளித்தார். அவர்தான் சிபிஜ விசாரணைக்குக் கோரிக்கை வைத்தார். காவல்துறை நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னதாகவே பகுஜன் சமாஜ் கட்சி கோரிக்கை வைப்பதற்கு முன்னதாகவே சிபிஜ விசாரணை வேண்டும் என்று பாஜகவில் இருந்து குரல் வந்தது. அதுதான் பாஜகவின் மாநில தலைவர் அண்ணாமலையின் குரலாகவும் ஒலித்தது.

ஆருத்ரா கோல்டு நிறுவனத்திற்கும் பாஜகவை சேர்ந்த சிலருக்கும் இடையில் உள்ள உறவு குறித்து கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக விவாதிக்கப்பட்டு வருகிறது. ஆருத்ரா கோல்டு விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பாஜகவில் பொறுப்பில் இருக்கின்றனர். இப்போது ஆம்ஸ்ட்ராங் கொலையில் ஆருத்ரா கோல்டு விவகாரமும் பேசப்படுகிறது.

பாஜக இதில் வலிந்து தலையிடுகிறது. இதுபோன்ற விவகாரங்கள் புலனாய்வு விசாரணைக்கு உரியதாக உள்ளது. அவர்களின் அரசியல் செயல்திட்டம் என்பது திமுக அரசுக்கு எதிராகத் தமிழகத்தில் பதட்டத்தை ஏற்படுத்த வேண்டும், சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது. அதற்குத் துணையாக பல அமைப்புகளும் இங்கே செயல்பட்டு வருவதைப் பார்க்க முடிகிறது.

ஆருத்ரா கோல்டு, பாஜக, ஆம்ஸ்ட்ராங் படுகொலை என்ற முக்கோணம் இதில் இருப்பதாகத் தெரிகிறது. ஆற்காடு சுரேஷ் மனைவி பாஜகவில் பொறுப்பில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்களில் சிலரும் நேரடியாக பாஜகவோடு தொடர்புடையவர்களாக இருக்கின்றனர் என்றும் சொல்லப்படுகிறது. எனவே இதுதொடர்பாக புலன் விசாரணை நடத்த வேண்டும்.

ஆக, ஒட்டுமொத்தமாக அரசியல் செயல்திட்டங்களை வரையறுத்துக்கொண்டு சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க சில சக்திகள் செயல்பட்டு வருவதை அறிந்து சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை மனுவாக வழங்கியிருக்கிறோம்.” என்று தெரிவித்தார்.

இத்தோடு திருமாவளவன் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாலும், திரைப்பட இயக்குநர் பா. ரஞ்சித் அரசியல் களத்தில் இதனை தொடர்வது குறிப்பிடத்தக்கது.

## திமுகவுக்கு எதிரான அரசியலில் பா. ரஞ்சித்

பா. ரஞ்சித் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் ஜூலை 8ஆம் திகதி இரவு ஆம்ஸ்ட்ராங் கொலை விவகாரத்தில் திமுக அரசை நோக்கி வெளிப்படையாக அழுத்தமான சில கேள்விகளை எழுப்பினார்.

“பெரம்பூரில் அண்ணனது உடலை அடக்கம் செய்யக்கூடாது எனத் திட்டமிட்டே தடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட இரண்டு நாட்கள் நிகழ்த்தப்பட்ட நாடகத்தின் முடிவில் விருப்பம் இல்லாமல், சென்னைக்கு வெளியே புறநகர் கிராம பொத்தூர் பகுதியில் அடக்கம் செய்ய நிர்பந்திக்கப்பட்டோம். திமுக அரசு, ஆட்சியில் அமர மிக முக்கிய காரணமாக அமைந்தது கணிசமான தலித் மக்களின் வாக்குகள் என்பது வரலாறு. வெறும் வாக்குக்கு மட்டும்தான் சமூக நீதியா?” என்று கேட்டிருந்தார்.

ஆம்ஸ்ட்ராங் கொலை தொடர்பாக பிரதான எதிர்க்கட்சிகள் எழுப்பாத அளவுக்குக் கடுமையாக பா. ரஞ்சித் கேள்விகளை எழுப்பியிருப்பதால் அவர் பகுஜன் சமாஜ் கட்சியில் இணையப் போகிறாரா என்ற கேள்விகளும் சமூக தளங்களில் எழுப்பப்படுகின்றன.



பா. ரஞ்சித்தின் சொந்த அண்ணனான வழக்கறிஞர் பிரபு, பகுஜன் சமாஜ் கட்சியில் பொறுப்பில் உள்ளார். அவர்தான் ரஞ்சித்தை ஆம்ஸ்ட்ராங்கிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். தொடர்ந்து ‘மெட்ராஸ்’ படப்பிடிப்பு சமயங்களில் ரஞ்சித்துக்கு ஆம்ஸ்ட்ராங் பெரும் உதவியாக இருந்துள்ளார். இதன் காரணமாகவும் ஆம்ஸ்ட்ராங்கின் அரசியல் பாதை காரணமாகவும் அவர்மீது ரஞ்சித்துக்கு பெரும் மரியாதை உண்டு எனச் சொல்லப்படுகிறது. ரஞ்சித்தின் நீலம் ஃபவுண்டேஷன் நிகழ்ச்சிகளில் ஆம்ஸ்ட்ராங் கலந்து கொண்டதுண்டு. இந்தப் பின்னணியில் தான் ரஞ்சித் திமுக அரசுக்கு எதிராகக் கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளார்” என்கிறனர் அவருக்கு நெருக்கமானவர்கள்.

இன்னொருபக்கம், ஆம்ஸ்ட்ராங் கொலையில் பாஜகவுக்கு எதிராக அரசியல் செய்யப் பலமான வாய்ப்புகள் இருந்தும் திமுக அமைதி காப்பது குறித்தும், பத்திரிகையாளர் சாவித்திரி கண்ணன் உட்பட அரசியல் விமர்சகர்கள் பல சந்தேகங்களை முன்வைக்கின்றனர்.

இவை எல்லாம் ஒருபக்கம் இருக்க, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்ற எண்ணம் மக்களிடையே பலமாகி, அது ஆளும் திமுகவுக்கு நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இதனை மாற்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் என்ன செய்யப்போகிறார் என்பதை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

# விளையாட்டால் ஒன்றிணைவோம்

## Let's Unite Through Sports

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் (TGTE)

# தமிழர் தடகள விளையாட்டுப்போட்டி

2024

TAMILS'

# Track & Field Competition

Saturday

**03**

AUGUST

10am-5pm

**RUNNING**
**50, 75, 100, 200, 400**
**Long Jump**
**Triple Jump**
**Shot Put**
**Discus Throw**

**ஓட்டப்பந்தயம்**
**50, 75, 100, 200, 400**
**நீளம் பாய்தல்**
**குண்டு எறிதல்**
**வட்டு எறிதல்**

Register By Scanning The QR Code:

**Location: Birchmount Stadium**

85 Birchmount Rd, Scarborough, ON M1N 3J7

Register By: July 28th, 2024

https://forms.gle/D1mddzKWoqPfKXdf6

Contact: (647) 570-4078

*OMS Repair Service*

Lawnmower, Snow Blower, Trimmers, Pressure washer, Drillers, Bikes and Electrical Bikes, Grinders Etc..

**NESAN**

Phone: 416-414-2480
Email: omsrepairservices@gmail.com

# மகிழ்ச்சி என்பது பலூன் அல்ல..!




எவ்வளவுதான் இன்று முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று ஒரு முடிவோடு எழுந்தாலும், அந்த மகிழ்ச்சிக்கு இடையூறாக ஏதாவது ஒன்று நடக்கிறது அல்லது யாராவது வந்து நிற்கின்றனர். என்னைச் சுற்றி இருப்போர் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும்போது, ஏன் எனக்கு மட்டும் மகிழ்ச்சி என்பது எப்போதும் எட்டாக் கனியாகவே இருக்கிறது?.

கலகலன்னு இருக்கிற கடை வீதியிலே ஒரு பத்துப் பேரை பார்த்து, “உங்களுக்கு வாழ்க்கையிலே சந்தோஷமாக இருக்க விருப்பமா, இல்லை சோகமா இருக்க விருப்பமா”ன்னு சும்மா கேட்டுப் பாருங்க. நிச்சயமா, வாழ்க்கையிலே யாராவது சோகமா இருக்க விரும்புவார்களா? சந்தோஷமாக இருக்கத்தான் விருப்பம்னு எல்லோரும் சொல்லுவர். நீங்க உடனே எப்பவும் எல்லோரும் சந்தோஷமா இருக்கிறீங்களான்னு கேட்டுப் பாருங்கள்; உடன் பாதிக்கு மேற்பட்டவர்களின் தலை கவிழ்ந்து விடும்.

நாம் எல்லோருமே வாழ்க்கையிலே சந்தோஷமா இருக்கணும்னுதான் ஆசைப் படுகிறோம். ஆனா, ஏன் நம்மாலே எப்பவும் அப்படி இருக்க முடியலை. ஏன்னா, என் வாழ்க்கை, என் மகிழ்ச்சி என்னை மட்டும் சார்ந்தது இல்லைன்னு நாம பிடிவாதமா நம்புகிறோம். நாம் எவ்வளவுதான் சந்தோஷிக்க ஆசைப்பட்டாலும், நம் சுற்றம், நட்பு, சுற்றுச் சூழல், இப்படிப் பல விடயங்கள், நாம் அறிந்தும் அறியாமலும் நம்மை அதது போக்கிலே இழுத்துட்டுப் போக அனுமதித்து விடுகிறோம்.

பணம், ஆரோக்கியம், வேலை, புகழ், அந்தஸ்து, நிம்மதி இப்படி ஒவ்வொன்றிற்குப் பின்னாலும் மகிழ்ச்சியைத் தேடி அலைந்து, ஒன்றல்ல இரண்டல்ல, 79 சதவீத மக்கள் மகிழ்ச்சியற்றுத் தவிக்கின்றனர் என்கிறது ஆசியா மாகாணத்தில் நடந்த ஆய்வு ஒன்று.

புரிந்து கொள்ளுங்கள். மகிழ்ச்சி என்பது பலூன் இல்லை. யார் வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் உடைத்துவிட்டுப் போவதற்கு. மகிழ்ச்சி என்பது நம்மோடு இயைந்து, நம்மை இயக்கிக்கொண்டு எப்போதும் நம் கூடவே இருக்கவேண்டிய நம் மூச்சுக் காற்று.

நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்; ஏதாவது தர்மசங்கடமான விடயத்தைக் கேட்டாலோ, தர்மசங்கடமாய் உணர்ந்தாலோ, நம்மையுமறியாமல் ஒரு பெருமூச்சு விடுவோம். அல்லது நாம் முனைந்து அந்தப் பெருமூச்சு விடும்போது இலகுவாக உணருவோம்.

இயற்கை நமக்கு மகிழ்ச்சியை மூச்சுக் காற்றாய்த்தான் வைத்திருக்கிறது.அதனால் தான் அது குறையும்போது, மூச்சுக்குத் திணறுவதாய் நமக்குப் பெருமூச்சு வருகிறது. நாம் கொஞ்சம் தெளிவாக இருந்தால், நம் பார்வை கொஞ்சம் மாறினால், எந்தச் சூழ்நிலையிலும் நம்மால் மகிழ்ச்சியை விட்டுக்கொடுக்காமல் இருக்கமுடியும். இல்லையென்றால், எந்தச் சூழலாலும் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தர இயலாது என்கிறது உளவியல்.



அது ஒரு பெரிய குடும்பம். மாமா, மாமி, அத்தை, சித்தி, சித்தப்பா, பிள்ளைகள், எனக் குடும்பமே சேர்ந்து கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கலாமே எனப் பல நாள் திட்டம் போட்டு அன்று சுற்றுலா போகின்றனர்.

பூத்துக் குலுங்கும் மலர்களும், வண்டுகள் மொய்க்கும் பழங்களுமாய் அழகிய தோட்டம். பொங்கி வழியும் நீரில் குளித்து, சில்லென்ற தென்றலில் குளிர்ந்து, தேனருந்தி மகிழும் பட்டாம் பூச்சியாய் முழுநாளும் குதூகலமும், சந்தோஷமுமாக நகர்கிறது. விதவிதமான உணவுகள், போட்டிகள், கிண்டல், கேலி, இளசுகளோட பார்வைப் பரிமாற்றம் என அற்புதமாய்க் கழியும் அந்த நாளோட இறுதியிலே, சிறு கல் தடுக்கி ஒரு குழந்தை விழ, அதுவரை தேடிய மொத்தச் சந்தோஷமும் அதுகூடவே விழுந்து விடுகிறது.

கலகல என்று இருந்த அந்த இடமே சலசலத்து, இறுக்கமாக மாற கனத்த உள்ளத்தோடு, ஒருத்தரை ஒருத்தர், நிகழ்வுக்கு காரணமாய்க் கை காட்ட, அந்த மொத்தக் குடும்பமும் தேடிவந்த மகிழ்ச்சியைத், தொலைத்துவிட்டுப் புதிய கவலையோடு திரும்புகிறது.

இதுதான் மகிழ்ச்சி எனத் தேடிப்போன மகிழ்ச்சி அவர்களுக்குக் கிடைத்ததா? கிடைத்தால் ஏன் அவ்வளவு எளிதில் அதைத் தொலைத்துவிட்டு மகிழ்ச்சியின்றித் திரும்புகின்றனர்.!

மகிழ்ச்சியை மூச்சுக் காற்றாய் நிரப்புவதும், விரல்களை வருடிச் சென்றாலும் கைகளுக்குள் கிட்டாமல் விரலிடுக்கில் நழுவிச் செல்லும் மெல்லிய காற்றாய் விடுவதும் நம் கைகளில்தான் இருக்கிறது.

பொதுவாக மகிழ்ச்சியை ஒரு மூச்சுக் காற்றாய், நம் மனதிலே நாம் தேக்கி வைக்கும்போது, ஒரு பற்றோடு வாழ்வோம். நாம் விரும்பியதைச் செய்வோம். அன்றி, மகிழ்ச்சியை ஏதாவது ஒன்றில் தேடும்போது, அதை நோக்கிய அந்தப் பயணத்திலேயே சோர்ந்துபோய் விடுகிறோம். அல்லது அந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்திலே ஏதாவது ஒரு பிரச்சினை வந்தாலும், அப்படியே உடைந்துபோய் விடுகிறோம். முடிவில் நம்மையே நாம் இழந்தும் விடுகிறோம்.

அந்தச் சின்னஞ்சிறு குருவிக்கு அன்று ஒரு அழகிய கனவு வந்தது. கனவில் மிக அழகான ஓர் உலகம் தெரிந்தது. இதுவரை குருவி அப்படியொரு அற்புத உலகத்தைப் பார்த்ததில்லை. வண்ண வண்ண விளக்குகள், அழகான நதிகள், மரங்கள், எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சி என்று அந்த அற்புத உலகம் மயக்கியது.

எப்படியாவது அந்த உலகத்துக்குப் போயே ஆகவேண்டும். அந்தச் சந்தோஷங்களை அனுபவித்தே ஆக வேண்டும் என்று அந்தக் குருவி விரும்பியது. ஆனால் போகும் வழிதான் அதற்குத் தெரியவில்லை. அது பறந்து போகும்போது ஒரு பிரபல ஜோதிடரைப் பார்த்து வழி கேட்டது. “எனக்கு முழு விபரம் தெரியாது. தெரிந்தவரை சொல்கிறேன். அதற்கு விலையாக நீ உன் சிறகுகளில் ஒன்றைத் தர வேண்டும்” என்றார் ஜோதிடர்.

ஒரேயொரு சிறகுதானே என்று குருவியும் சரி என்று கொடுத்துவிட்டு, அவர் சொன்ன வழியில் பறந்து சென்றது. குறிப்பிட்ட இடத்துக்கு மேல் அது வழி தெரியாமல் திகைத்து நிற்க, அந்த வழியே வந்த பாம்பிடம் கேட்டது.

பாம்பும், “எனக்கு தெரிந்தவரை சொல்கிறேன், பதிலுக்கு நீ உன் அழகான சிறகில் ஒன்றைத் தருவாயா?” என்றது. இன்னொரு சிறகுதானே, தந்தால் போச்சு என்று குருவியும் சம்மதித்தது.

இப்படியே அந்தக் குருவி, அற்புத உலகின் சந்தோஷங்களை அனுபவிக்கப் போகும் ஆசையில் வழி சொன்னவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு சிறகாகப் பிய்த்துக் கொடுத்தபடி சென்றது.

முடிவாக, அதோ! கனவில் கண்ட அந்த அழகான உலகம், அதன்கண் முன் தெரிந்தது. வந்து விட்டோம், வந்தே விட்டோம், இன்னும் சில நூறடி தூரம் பறந்தால் அந்த அற்புத உலகம். குருவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

ஆனால், இதென்ன;. ஏன் என்னால் பறக்க முடியவில்லை. ஐயோ, என் உடம்பெல்லாம் கனக்கிறதே. கீழே இருந்து காற்றில் எழும்பவே முடியவில்லையே என்று திடீரென குருவி கதறியது.

மெல்ல மெல்லக் குருவிக்குப் புரிந்தது. பறப்பதற்கான சிறகுகளை ஏதோ ஒரு தேடலில், வழி நெடுகிலும் பிய்த்துக் கொடுத்து, எதை இழந்து கொண்டிருக்கிறோம் என்று அறியாமலே, ஒவ்வொன்றாகச் சிறுக சிறுக இழந்து, இப்போது பறக்க முடியாமல் முடமாகிப்போய் விட்டோம் என்ற உண்மை விளங்கியது.

இதோ, கண் முன்னேதான் கனவில் கண்ட அந்த அற்புத உலகம். ஆனால் அதை அனுபவிக்க முடியாமல், கீழே கிடக்கிறேனே என்று அந்தக் குருவி துடித்தது. அந்தச் சோகமும் ஏக்கமும் தாங்க முடியாமல் எட்டாத உயரத்தில் தெரியும், அந்த மாய உலகின் வாசலைப் பார்த்த படியே பரிதவித்துக் கொண்டிருந்தது அந்தக் குருவி.

மகிழ்ச்சியை தன்னுள் நிரப்பாமல் வெளியே தேடுவதால் ஏற்படும் விளைவைக் குறிக்கும் அற்புதக் கதை இது.

இதுதான் சந்தோஷம் என்ற ஏதோ தேடலில் உண்மையில் நம்மிடம் இருக்கும் சந்தோஷங்களை நம்மையுமறியாமலேயே இழந்து கொண்டிருக்கிறோம்.

குடும்பத்துடன் வெளியே செல்வது, பிள்ளைகளோடு மனம்விட்டுப் பேசுவது, பிடித்த புத்தகம் படிப்பது, பிடித்த படம் பார்ப்பது, பிடித்த இடங்களுக்குப் போவது, பிடித்த உடை உடுத்துவது, பிடித்த உணவு உண்பது என்று எல்லாச் சந்தோஷ சிறகுகளையும் ஏதோ ஒன்றின் தேடலில், ஒவ்வொன்றாக வெட்டி வெட்டி வீசுகிறோம்.

கடைசியில் நாம் மகிழ்ச்சி என்று தேடிய ஒன்று கிடைக்கும்போது, நரை கூடி, திரை வந்து, உடலும் மனசும் தளர்ந்து, எல்லாம் இருந்தும், அனுபவிக்க முடியாத நிலைக்குப் பெரும்பாலும் தள்ளப்படுகிறோம்.

இது இதைச் செய்தால் மகிழ்ச்சியாக இருப்போம் என்று நினைக்காமல், நாம் இயல்பாய் மகிழ்ச்சியாக இருந்தால் எதையும் சிறப்பாகச் செய்வோம். நாம் நல்ல மனநிலையில் மகிழ்ச்சியாக இருக்கும்போது, நாம் எடுக்கும் முடிவுகளும், நல்லவிதமாக நம் எதிர்காலத்தையே மகிழ்ச்சியாக வைக்கக்கூடிய வகையில் அமையும்.

உண்மையில் சந்தோஷம் என்பது சட்டென்று பற்றிக்கொள்ளும் ஒரு தொற்று. மகிழ்ச்சியாக இருக்கிற ஒருவரால்தான் மற்றவருக்கு மகிழ்ச்சி கொடுக்க முடியும்.

மகிழ்ந்து மகிழ்விப்போம்!

